# களத்தில்


சிங்கள இராணுவம் யாழ்ப்பாண மண்ணில் அகலக்கால் பதித்திருக்கிறது. பெரும் படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பதுதான் கஷ்டம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர் எதிர்கொண்ட வரலாற்று உண்மையிது.

இந்த வரலாற்றுப் பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக் கொள்வதற்கு வெகுகாலம் செல்லாது.




*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.*
மாவீரர் நாள் செய்தி - 1995



(15.04.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (206)


## யாழ் குடாநாட்டில்

# உறுதியாகக் கால்பதித்துள்ள விடுதலைப் புலிகள்

**இருபது நாட்களில் அன்ரனோவ் விமானம் ஒன்று, வேவு விமானம் ஒன்று, பதினைந்துக்கும் மேற்பட்ட ஆட்டிலறிகள், இரண்டு டோராக்கள், ஏழுக்கும் மேற்பட்ட டாங்கிகள், நான்கு கவசவாகனங்கள், பெருந்தொகை நவீன ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் என்பனவற்றை சிங்களப்படை இழந்துள்ளது. இதைவிட பலநூற்றுக்கணக்கான இராணுவத்தினர் உயிரிழந்ததும், படுகாயமடைந்ததும், குடாநாட்டு நிலைமையின் தீவிரத்தை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றன. குடாநாட்டுக்குள் இத்தனை இழப்பை, குறுகிய காலத்தில் சிங்களப்படை சந்தித்திருப்பது இதுவே முதல்தடவை. சிங்களப்படையின் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை பட்டபாட்டை மீள நினைவுபடுத்தும் விதமாய், விடுதலைப் புலிகளின் மரபுப்படையணிகள் குடாநாட்டுக்குள் நிலைகொண்டு, சிங்களப்படையின் முன்னேற்றங்களை முறியடித்துவருகின்றன. சிங்களப் படைக்கு தோல்வி நிட்சயம் என்பது நிட்சயமானது.**



07.04.2000 அன்று நாகர் கோவில் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் பீரங்கித் தாக்குதலில் கடற்படையினரின் இரு டோரா படகுகள் அழிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தை மீட்கும் உறுதியுடன் விடுதலைப் புலிகளின் படையணிகள் குடாநாட்டுக்குள் உறுதியாகக் கால்பதித்துள்ளன என்பது தெட்டத்தெளிவானது. தற்போது ஆனையிறவு இயக்கச்சிப் படைத்தளங்களின் பிரதான விநியோகப்பாதை விடுதலைப் புலிகளால் துண்டாடப்பட்டுள்ளது. இப்பாதையை, விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கவும், விடுதலைப் புலிகளின் நகர்வைத் தடுக்கவும், சிறீலங்கா அரசும் அதன் படைத்தலைமையும் பதைபதைப்புடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும், யாழ் குடாநாட்டு நிலவரத்தை நன்கு வெளிப்படுத்துகின்றன. சிறீலங்கா இராணுவ வரலாற்றில் முப்படைத்தளபதிகளும் பலாலியில் தங்கியிருந்து படை நடவடிக்கையை வழிநடத்த உத்தரவிடப்பட்டது இதுவே முதல்தடவை. பளைக்கும் எழுதுமட்டுவாளுக்கும் இடைப்பட்ட பகுதியை மீட்டு, தமது நிலைகளைப் பலப்படுத்திவரும் விடுதலைப் புலிகளிடம் இருந்து அப்பகுதியை மீண்டும் கைப்பற்ற, சிங்களப்படையினர் இரண்டு வாரத்தில் ஆறு தடவைகளுக்கு மேல் முயற்சித்து தோல்வியை தழுவியுள்ளனர். தோல்வியைத் தழுவியுள்ளனர் என்பது மாத்திரமல்ல மிகமோசமான இழப்புக்களையும் சம்பாதித்துள்ளனர்.

பன்னிரண்டு நாட்களாக, முப்படைத் தளபதிகளும் பலாலியில் இருந்து திட்டமிட, அனுபவம் வாய்ந்த இராணுவ அதிகாரிகள் ஆலோசனை வழங்க, விடுதலைப் புலிகளிடம் இழந்த ஆறு கிலோ



30.03.2000 அன்று அநுராதபுர காட்டுப் பகுதியில் 40 சிறீலங்காப் படையினருடன் வீழ்ந்து நொருங்கிய அன்ரனோவ் விமானம்.

மீற்றர் பகுதியைக் கைப்பற்ற, சிங்களப் படையினர் மிகக்கடுமையாக முயற்சித்தனர். தமது அனைத்து வளங்களையும் பாவித்தனர். ஆனால் மோசமாகத் தோற்றுப்போயினர். சந்திரிகாவின் நேரடிக் கட்டுப்பாட்டில், இந்த படைநடத்துகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அடுத்த நகர்வைத் தடுக்க அவர்கள் தமது படைவலுவையும் ஆற்றலையும் தற்போது நம்பவில்லை என்றே தெரிகின்றது. அவர்கள், பொதுமக்களை மனிதக் கவசங்களாக்கும் மோசமான, கொடூரமான மனிதவிரோத நடவடிக்கையையே நம்பியிருக்கின்றனர். பன்னிரண்டுநாட்கள் பலாலியில் இருந்தபடி, விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டு, தமது இருப்பை பாதுகாக்கவும் உறுதிப்படுத்தவும் முயன்று பார்த்து முடியாமல்போன நிலையில், கொழும்பு திரும்பியுள்ள சிறீலங்காவின் முப்படைத் தளபதிகளும், சிறீலங்கா சனாதிபதியுடன் அடுத்து என்ன செய்யலாம் என, ஆராய்ந்துள்ளனர். அவர்கள் மீண்டும் பலாலி செல்வார்கள், சந்திரிகாவின் நாசகாரத் திட்டத்தை சுமந்தபடி. ■

## "எமது மக்களை வாழ விடுங்கள்" ஐ.நா நோக்கிய தமிழர்பேரணி

→ 2

## பௌத்தம் நாடுகடத்தப் படுகின்றது

→ 4

## தமிழீழத் தேசியத் தலைமையை அழிக்க இடப்பட்ட திட்டம் அம்பலம்

→ 5

## தமிழர் பிரச்சனைக்கு தீர்வைக் காட்டுதல் சர்வதேசக் கடமையாகும்

→ 8

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# பெரும் தோல்விகளைத் தடுக்க பேடித்தனங்கள் !

பெரும் தோல்விகளைச் சந்திக்கின்ற போது, அப்பாவிப் பொதுமக்கள் மீது பழிதீர்க்கும் தாக்குதல்களை மேற்கொள்வது, சிங்களப் படையினரின் பொதுவானதும் வழமையானதுமான நடைமுறையாக இருந்து வந்துள்ளது. வன்முறைக்கும்பலய் விரைந்து கிராமங்களைத் தாக்குவதையும், பொதுமக்களைக் கொத்துக் கொத்தாய் அழிப்பதையும், தமது செயற்பாடுகளின் ஒரு அங்கமாகவே சிங்களப்படை வரித்துக் கொண்டுள்ளது. காலத்துக்குக் காலம் ஆட்சிபீடம் ஏறும் சிங்கள அரசாங்கங்களும் இதனை அங்கீகரித்தே வந்துள்ளன என்பதுடன், ஊக்கப்படுத்தவும் செய்துள்ளன. இராணுவத் தோல்விகளுக்கு, தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டுகள் வீசி அழிப்பதையும், அவை விடுதலைப் புலிகளின் இலக்குகள் என நியாயப்படுத்தவும், சிங்கள அரசுகள் தயங்கியது கிடையாது. தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதன் மூலம், தமிழ் மக்கள்மீது பழிவாங்கும் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் தமது தோல்விகளுக்கு ஆறுதல் தேடும் சிங்களப்படையினர், தமது தோல்விகளைத் தடுக்க, பொதுமக்களை மனிதக் கவசங்களாக்கும் கீழ்த்தரமான, பேடித்தனமான நடைமுறையைத் தற்போது கைக்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

தமது பாதுகாப்பான நடமாட்டங்களுக்கு பொதுமக்களின் போக்குவரத்து வாகனங்களை சிங்களப்படையினர் பாவித்துவருவது ஒன்றும் புதிதான விடயமல்ல. அவர்கள், பொதுமக்களுடன் பொதுமக்களாக பஸ் வண்டிகளிலும், கப்பல்களிலும், விமானங்களிலும் பயணப்படுகின்றனர். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இருந்து தப்பிக்க அவர்கள் இதனை ஒரு வழியாகக் கைக்கொள்ளுகின்றனர்.

ஆனால் இதை எல்லாம் மிஞ்சும் விதமாய் தமது பெரும் தளம் ஒன்றை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாகப் பாவிக்கத் துணிவுடன் முனைந்திருக்கின்றனர். அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களையும், மனித உரிமைச் சட்டங்களையும், அனைத்துலகப் போர்ச் சட்டங்களையும் தூக்கிக் காலிற்போட்டு மிதித்துவிட்டு, சிங்களப்படைத் தலைமை இந்தப் பேடித்தனத்தைப் புரிந்திருக்கின்றது.

சிங்களப்படையின் ஆனையிறவு இயக்கச்சிப் பெருந்தளங்கள் எக்கணமும் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்துவிடும் என அச்சம் கொண்டு அதனை எப்படித் தடுப்பது என்று சிங்களப்படைத்தலைமை ஆராய்ந்து எடுத்த முடிவாகவே இதைக் கருதலாம்.

பளை, பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் இருந்து பொதுமக்களை வெளியேற விடாது சிங்கள இராணுவம் தடுத்தேதாடல்லாமல், வெளியேறிச் சென்ற மக்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை தடுத்து தமது முகாம்களை காவலரண்களை அண்டிய பகுதிகளில் தங்கியிருக்க நிர்ப்பந்தித்தது.

கடந்த இரண்டாம் திகதி, சண்டையை நிறுத்தி மக்களின் போக்குவரத்திற்கு வழியேற்படுத்த விடுதலைப் புலிகள் அறிவித்தல் விடுத்த போதும், சிங்களப்படை பொதுமக்களை தொடர்ந்து தனது பிடியில் வைத்திருக்கும் முடிவில் இருந்து தளரவில்லை.

இங்கு, இராணுவத்தால் மனிதக் கவசமாக தடுத்துவைக்கப்பட்ட மக்களை, விடுவிக்க பொதுமக்கள் போராட்டம் நடத்த வேண்டிய நிலை. யாழ்ப்பாணத்தில் மறியல் போராட்டங்களில் பொதுமக்கள் குதித்தனர். பல்கலைக்கழக மாணவர்களோ பகிஸ்கரிப்புப் போராட்டத்தில் குதித்தனர். மனிதநேய, மற்றும் மத அமைப்புக்கள், சந்திரிகா அரசை வலியுறுத்தின. மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரிக்கை மனுக்கள் சிறீலங்கா ஜனாதிபதிக்குச் சென்றன. பளை, பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் சிக்குண்ட பொதுமக்களை விடுவிக்க எங்கும் குரல்கள். பிரச்சினை சர்வ தேசம் வரை எட்டியது.

ஆனால், இதுவிடயமாக, ஒரு வாரம் கழித்து, மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், பலாலி சென்று சிங்களப்படையின் வடபிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்தினாவிடம் கதைத்ததற்கு, "அப்படியா தனக்கொன்றும் தெரியாதே " என்ற பாணியில் பதிலளித்திருக்கின்றார் அவர். அங்கிருக்கின்ற மக்கள் விரும்பினால், அவர்கள் பாதுகாப்பெனக் கருதும் பகுதிக்குச் செல்லத் தடையேதும் இல்லை என்றும் தெரிவித்திருக்கின்றார். நிவாரணம் வழங்கச்சென்ற யாழ் செயலக அதிகாரிகளை கிளாலியில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மக்கள் சுற்றிவளைத்து மறியல் செய்ததும், அதிகாரிகளின் வாகனங்களைச் செல்லவிடாது தடுத்துநிறுத்தியதும், நிவாரணத்தை பெற்றுக் கொள்ள மறுத்து, தமது பாதுகாப்பான வெளியேற்றத்திற்கு அனுமதி பெற்றுத்தந்தாலே போதுமென தடுத்துவைக்கப்பட்ட மக்கள் குரல் கொடுத்ததும் வடபிராந்திய இராணுவத் தளபதிக்கு தெரியாமல் இருப்பதுதான் விந்தை.

எதிர்காலத்தில், சிங்களப்படையினர் பெரும் வரலாற்றுத் தோல்விகளைச் சந்திக்கப்போவது உறுதியானது. அதேவேளை, இப்பெரும் தோல்விகளில் இருந்து தப்பிக்க சிங்களப்படை, இது போன்ற பேடித்தனமான காரியங்களில் ஈடுபடக்கூடும் என்பதற்கான அறிகுறிகளே தற்போது வெளிப்பட்டிருக்கின்றன. இது விடயத்தை, அனைத்து மனிதாபிமான அமைப்புக்களினதும், சர்வதேச சமூகத்தினதும் கவனத்திற்கு கொண்டு செல்லவேண்டியது முக்கியமாகப்படுகின்றது. அனைத்துத் தமிழ் மக்களும் இதுவிடயத்தில் உசாராகவே இருக்கவேண்டும். ■

# "எம் மக்களை வாழ விடுங்கள் !"
## ஐ.நா நோக்கிய தமிழர் பேரணி.



கடந்த 03.04.2000 திகதி, திங்கட்கிழமை, ஜெனீவா நகரில் அதன் மத்திய புகையிரத நிலையத்திலிருந்து,

"இலங்கைத்தீவில் தமிழர்கள்மீதான படுகொலையை நிறுத்து."

"அல்லலுறும் தமிழ்மக்களுக்கு உணவும் மருந்தும் அனுப்பு."

"தமிழ்ச் சகோதரிகள் மீதான கொடும் பாலியல் துன்புறுத்தல்களை உடன் நிறுத்து."

"சிங்களச் சிறைகளில் வதைபடும் அப்பாவித்தமிழர்கள் மீதான படுகொலைகளை நிறுத்து."

என மனிதாபிமானம் பேசும் மனச்சாட்சி கொண்ட ஐரோப்பிய மக்களின் இதயக் கதவுகளைத் திறக்க ஓங்கிக்குரல் கொடுத்தவண்ணம், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஐரோப்பாவாழ் தமிழீழமக்கள் ஒன்றுகூடி அணிவகுத்து ஐ.நா நோக்கிய தமது அணிவகுப்பைத் தொடங்கினர்.

பிற்பகல் 2.30 மணியளவில் மேற்குறித்த பதாதைகளை பிரெஞ்சு, ஜேர்மன், ஆங்கிலம் உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் தாங்கிய வண்ணம், தமிழர்களின் பாரம்பரிய நாதஸ்வர இசை நாதம் ஒலிக்க பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து திரண்டிருந்த தமிழ் மக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **AUSTRALIA**<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | **CANADA**<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | **DENMARK**<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | **FRANCE**<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | **GERMANY**<br>TCC<br>Postfach 101613,<br>46016 Oberhaousen. | **ITALY**<br>TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| **NETHERLANDS**<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | **NORWAY**<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | **SWITZERLAND**<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | **SWEDEN**<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | **UNITED KINGDOM**<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | **U.S.A**<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

# செய்திக்குத் தணிக்கை! செய்தியாளர்களுக்குத் தண்டனை!

கடந்த வாரம் சிறீலங்காவில், ஊடகவியலாளர்களுக்கு எதிராக இரு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஒன்று மட்டக்களப்பிலும் மற்றையது சிறீலங்காவின் தலைநகரிலும் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பில், பிரபலமான தமிழ்ப் பத்திரிகையாளர் நடேசன் அவர்களின் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இராணுவமுகாம், மற்றும் கூலிக்குழுக்களின் முகாம் மற்றும் காவலரண்கள் அமைந்துள்ள பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. நள்ளிரவு, வீட்டுக்குள் குண்டை வீசிவிட்டு, குண்டை வீசியோர் தப்பியோடிவிட்டனர். வீடு சேதமடைந்துள்ளது உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

சிறீலங்கா அரசின் இனவிரோதச் சட்டங்கள், இராணுவத்தினரின் தான் தோன்றித்தனமான இராணுவச் சட்டங்களால் தமிழ்மக்கள் அனுபவித்து வரும் சொல்லொனாத் துன்பங்கள் குறித்து, அடிக்கடி கட்டுரை வரைவதால், ஆட்சியாளர்கள், இராணுவத்தினர், மற்றும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களோடு சேர்ந்தியங்கும் கூலிக்குழுவினரை இது எரிச்சலுற வைத்திருக்கும் என்பது உண்மையானது. இதன் காரணமாக, இவரைக் கொலைசெய்யும் நோக்கோடு, அல்லது எச்சரிக்கும் நோக்கோடு இக்கைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றே கருதப்படுகின்றது.

இதுபோன்று, கொழும்பில், பி.பி.சியின் சிங்களச் சேவையின் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தாக்கப்பட்டுள்ளார். கொழும்பில், பௌத்த பிக்குகள் மற்றும் சிங்களப் பேரினவாதிகள் கடந்த ஆறாம் திகதி, நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தியிருந்தனர். இதன்போதே, செய்தி சேகரிக்கச் சென்ற பி.பி.சி.யின் சிங்களச் சேவையின் செய்தியாளர் தாக்கப்பட்டுள்ளார்.

இவ்விரு சம்பவங்கள் குறித்து, அனைத்துலக ஊடகவியலாளர் அமைப்புக்கள் கண்டனங்கள் எழுப்பிவருகின்றன. மட்டக்களப்பில், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், சமூகசேவையாளர்கள் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர். கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம், மற்றும் ஊடகவியலாளர் அமைப்பு என்பன இணைந்து இவ்ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியுள்ளன.

வன்னிப் பத்திரிகையாளர் சங்கம் இதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கின்றது.

பிரான்ஸ் பாரிசில் தலைமையகத்தைக் கொண்டியங்கும், ஊடகவியலாளர் நலன்களைக் கண்காணிக்கும் அமைப்பொன்று, வெளியிட்ட கண்டன அறிக்கையில், ஆயிரத்தித் தொளாயிரத்து தொண்ணூற்றொன்பதாம் ஆண்டின் பின்னர், சிறீலங்காவில் நான்கு செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

சந்திரிகா ஆட்சியில், செய்தியாளர்கள் கொல்லப்படுவது, கொலைப் பயமுறுத்தலுக்கு ஆளாவது, தாக்கப்படுவது, சிறைப்படுத்தப்படுவது என மிக மோசமான அடக்குமுறைக் கொடுமை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

## உங்கள் கவனத்திற்கு




அடக்குமுறை இராணுவங்களின் பிடியில் சிக்கி, எமது மக்கள் பட்ட கொடுமைகள், துன்பங்கள் எண்ணிலடங்காதவை. தசாப்தங்களாக எம் மக்கள் எத்தனை துன்பங்களை துயரங்களைச் சந்தித்துவிட்டனர். மனதுக்குள் புளுங்கிக் கொண்டிருக்கும் அந்தக் கொடிய அனுபவங்களை, நினைவுகளை கொட்டித்தீர்க்க இங்கே களமமைத்திருக்கின்றோம். இந்தப் பகுதியில், எமது மக்கள் தாம் பட்ட துயரங்களை துன்பங்களை கொட்டித் தீர்க்கலாம். இது கற்பனை கலந்த கதைக்களமாக நிட்சயமாக இருக்காது. உண்மையின் களம் இது. தமது அனுபவங்களை, அல்லது, தமக்கு முன்னால் நிகழ்ந்த தாம் அறிந்த கொடுமைகளை யாரும் எழுதியனுப்பலாம். யாவும் உண்மையாக 'இருத்தல் வேண்டும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோள். உங்கள் நாடுகளில், எமது கிளைகளுக்கூடாகவோ பிரதிநிதிகளுக்கூடாகவோ இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள். உங்களுடன் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரியை முக்கியமாக குறிப்பிடவும். வெளியிடப்படும் வாக்குமூலம் பகுதியில் உண்மையான பெயர் விபரங்களை வெளியிடுவதை தவிர்ப்பதும் தவிர்க்காமல் விடுவதும் உங்களைப் பொறுத்தது.

நேரடியாக எமக்கு எழுதி அனுப்பவிரும்புவோர். KALATHIL C.C.T France. 341 rue des Pyrénées, 75020 Paris. FRANCE. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

தமிழீழத்தின் பொருண்மிய மேம்பாட்டை கருத்திற் கொண்டு செயற்பட்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்தகாலங்களில் செயற்படுத்திவந்த வேலைத்திட்டங்கள் சமூக ஆய்வுப்பட்டறைகள், ஆராய்ச்சிகள் பற்றிய செய்திகள் பத்திரிகைச் செய்தித் தொகுப்புக்களாக தொகுக்கப்பட்டு கணணிவலை மூலமாக வெளிவருகின்றன. அவைபற்றிய விபரங்களை www.teedor.org என்னும் பகுதியில் பார்வையிடலாம்.

அத்துடன் 1980 களில் இருந்து 1990 வரைக்கும் சிங்கள அரச பயங்கரவாதத்தால் யாழ் நகருக்குப் போரினால் ஏற்பட்ட சேதங்கள் மதிப்பீடு எனப்படும் புள்ளிவிபர அறிக்கை ஆங்கிலத்தில் பொறியியல் மதியுரையகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. யாழ் நகர வரைபடங்களுடன், சேதவிபரப் படங்களும் தெளிவான புள்ளி விபரங்களும் இதில் அடங்கியுள்ளன. வதிவிடங்கள், வழிபாட்டுத்தலங்கள், கைத்தொழிற்சாலைகள், வர்த்தக, நூல்நிலையங்கள், கல்விச்சாலைகள், அரச திணைக்களங்கள் போன்றவற்றிற்கு ஏற்பட்ட அழிவுகள் யாவும் தெளிவாக இதில் வழங்கப்பட்டுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் தாங்கள் வதியும் நாடுகளில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிளைகளுடன் தொடர்புகொண்டு இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

---

மிகுந்த உற்சாகத்துடன். உணர்வுப் பிரவாகத்துடன் தமது நீதிக்கான பயணத்தை ஆரம்பித்தனர். பேரணியின் முன்பு தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படத்தையும் தாங்கிச் சென்றனர்.

ஜெனிவா ஐ.நா மன்றின் முன்றலில் ஊர்வலமாய் வந்த மக்கள் ஒன்றுகூடினர். அங்கு தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தற்கொடையாகி உயிர்நீத்த மாவீரர்கள், மக்களுக்கான அமைதி வணக்கத்துடன் பொதுக்கூட்டம் ஆரம்பமானது. முன்னாள் யாழ் மாவட்டக் குருத்துவ முதல்வர் (விகார் ஜெனரல்) வணக்கத்திற்குரிய கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் ஆரம்பவுரை வழங்கினார். அவர் தமது உரையில், **"இலங்கைத்தீவில் தமிழ்மக்கள் மீதான இனஅழிப்புக்கள், அடக்குமுறைகள் அனைத்தும் நிறுத்தப்படும்வரை, நாம் அமைதியாக இருக்கமுடியாது எனவும் எமது எதிர்கால சந்ததிக்கு இந்த இன்னல்களும், அச்சுறுத்தல்களும் நேரா வண்ணம், அவர்களுக்கு ஓர் சுபீட்சமான வாழ்வை வழங்க நாம் அனைவரும் உழைக்க வேண்டும்"** என்று எம் எல்லோரதும் கடமையை உணர்த்தினார்.

அவரைத் தொடர்ந்து உலகெங்கும் இருந்து வருகை தந்திருந்த பேராளர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தையும், தமிழ் மக்களின் அவல நிலைகளையும் இன்றைய புதிய உலக ஒழுங்கில் எமது விடுதலைப் போராட்டத்தின் அங்கீகாரத்திற்கான அனுகூலங்கள் சாத்தியப்பாடுகள் பற்றியும், தமிழீழ தேசத்தில் தமிழர் படையணியின் நிலமீட்பு வெற்றிகள் பற்றியும் பல்வேறு மொழிகளில் மிகத் தெளிவாக எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் வணக்கத்திற்குரிய இம்மானுவேல் அடிகள் எழுதிய எனது மக்களை வாழவிடுங்கள் என்ற நூலின் பிரெஞ்சுப்பதிப்பு வெளியிடப்பட்டது. இதனை சுவிற்சலாந்தில் தமிழர்போராட்டத்திற்கு ஆதரவாக் குரல் கொடுத்துவரும் மதிப்புக்குரிய செல்வி.மடலின் அக்கர்மான் அவர்கள் முதற்பிரதியை வெளியிட, அரசசார்பற்ற மனித உரிமைகள் சங்கப் பாதுகாவலர் திரு.ஒந்திரே துபாக்கியே அவர்கள் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் இந்நூற்பதிப்பில் உதவிய பேராசிரியர் நீல்சனுக்கு, அடிகளார் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தொடர்ந்து அமெரிக்க சிவப்பிந்தியக் கலைஞர்கள் வழங்கிய உணர்வுடனான விடுதலை இசைப்பாடல் இசைநிகழ்ச்சி நடைபெற்றது. தாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான தமது ஒன்றிணைந்த ஆதரவு என்றும் உண்டு என்பதனை இந்நிகழ்வு வெளிப்படுத்தியது.

அடுத்து தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த பிரதம பேச்சாளர் திரு. வைகோ அவர்களின் உணர்ச்சிமிக்க உரை இடம்பெற்றது. தமிழர் தேசிய உடையுடன் தோன்றிய அவர் அங்கு உரையாற்றும்போது, **"இந்த யுகத்தில் எதையும் தாங்கவல்ல பிரபாகரன் தலைமையிலான் பெரும் படையால், அடிமை இருளில் இருந்து ஒளி பெறப்போகின்ற காலம். தமிழீழம் மலரப்போகின்ற காலம். தமிழினத்தின் பண்பாட்டைக் கருவறுக்கும் முயற்சியில் இருந்து பெரும் திருப்பத்தைத் தரப்போகின்ற காலகட்டத்தில் நாம் இங்கு கூடியிருக்கின்றோம்."** என்றார். மகோன்னதமான இத்திருநாளில் மலரட்டும் தமிழீழம் என்று உறுதியுரை வழங்கியதுடன், பல்வேறு உலக விடுதலைப் போராட்டங்களை ஒப்பிட்டு விளக்கியதுடன், தமிழினத்தின் பெருமையையும் எடுத்துக்கூறினார்.

இறுதியாக தமிழீழ தேசிய விடுதலை என்ற ஒரே நோக்குடன் உணர்ச்சிப் பிழம்புகளாகத் திரண்டிருந்த மக்கள் அனைவரும் ஒன்றித்துப் பாடிய நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் பாடலுடன், மீண்டும் எமது தமிழீழ அங்கீகாரத்திற்கான நீதியையும், உண்மையையும் எடுத்துக் கூறிய தமது கடமை ஒன்றைச் செய்த உவகையுடன் தமிழ்மக்கள் நிறைவுடன் சென்றனர். ■



# பௌத்தம் நாடுகடத்தப்படுகின்றது

'பொய் வதந்தி களைப் புதிதாகப் புனையாதே
அவற்றைத் திரும்பக் கூறாதே.
குறை கூறாதே
பிறருடைய நல்லியல்புகளை நாடியறிக.
அவர்களைப் பகைவர் பழிக்கின்
நீ முழுமனதோடு
அவர்கட்காகப் பரிந்துபேசும் வண்ணம்
நல்லன நாடுக.'

'ஒரு மனிதன் சினத்தை
அன்பால் வெல்லட்டும்.
தீமையை நன்மையால் வெல்லட்டும்.
உலோப குணங்களை
உதாரத்தால் வெல்லட்டும்.'

'அடக்கமிலாதான், பொய் பேசுவோன், மழித்த
தலையால் முனிவனாகான்.
விருப்பும் உலோபமும்
நிறைந்தோன் முனிவனாவது யாங்ஙனம்.'

இது புத்தபகவான் அருளியது. அன்பையும் அறநெறியையும் மனிதப் பண்பையும் மனித இனத்திற்குப் போதித்த புத்தபகவானின் அருள் வாக்கை இங்கே தருவதற்குக் காரணம் இருக்கின்றது.

கடந்த வாரம் கொழும்பில், சமாதானத்திற்கெதிரான ஒரு பெரும் போராட்டமே நடைபெற்றிருக்கின்றது. அறுநூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட சமாதானத்துக் கெதிரான இப்பேரணியில் ஐநூறுக்கும் மேற்பட்டோர் பௌத்த பிக்குகள் என்பது முக்கியமாகப் படுகின்றது. சாதாரண மக்களைவிட பௌத்த பிக்குகள் சமாதானத்தை வெறுக்கின்றனர். யுத்தத்தை விரும்புகின்றனர். ஒரு இனம் அழிக்கப்படுவதையும், அதன்மூலம் தீவு பூராவும் இரத்த ஆறு ஓடுவதையும், சாவும் அழிவும் எங்கும் தலைவிரித்தாடுவதையும் அவர்கள் விருப்புடன் வரவேற்கின்றனர் என்ற செய்தியையே பௌத்த பிக்குகளின் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி எமக்குச் சொல்லுகின்றது.



மனித உயிர்களிடத்தே அன்பையும், ஆன்மீகத்தையும், சாந்தத்தையும், சாத்வீகத்தையும் போதித்த ஒரு மகானினது கூடாரத்தில் இருந்தபடி, அவரின் போதனைகளின்வழி நாட்டையும் மக்களையும் வழிநடத்தப்போவதாகக் கூறிக்கொள்ளும் பௌத்தமதத் துறவிகளின் கோரமுகம், இனவாத முகம், தமிழ் இனத்திற்கெதிரான மனிதத்திற்கெதிரான மனித விரோத முகம் இன்றுநேற்றல்ல அது நீண்டகாலமாக, வரலாற்று ரீதியாக அது தன்னை அடிக்கடி இனங்காட்டியே வந்திருக்கின்றது. தமிழினம் உரிமை பெற்றுவிடக் கூடாது என்பதில், பௌத்தபிக்குகள் மிகுந்த தீவிரமாய் இருக்கின்றார்கள் என்பது, கடந்த காலங்களில் நன்கு வெளிப்பட்டிருக்கின்றது. பல ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதற்கு அவர்கள் முதற் காரணகர்த்தாக்களாகியுள்ளனர் என்பது தெளிவு. அவர்கள், தம்மை பௌத்த மதத்துறவிகள் என்ற முகாமில் இருந்து விடுவித்து, சிங்களப் பேரினவாத முகாமில் இனங்காட்டிக்கொள்ளவே பிரியப் படுகின்றனர்.

## -சுப்பு-

பயங்கரவாதத்திற் கெதிரான தேசிய இயக்கம் என்ற பெயரில் இயங்கிவரும் பேரினவாத அமைப்பொன்றின் தலைமையில், சுமார் ஐம்பது பௌத்த சிங்களப் பேரினவாத அமைப்புக்கள், சமாதானத்திற்கெதிரான இவ் ஆர்ப்பாட்டப்பேரணியை நடத்தியுள்ளன.

ஆர்ப்பாட்டம் செய்து கோசங்கள் எழுப்பியபடி, நோர்வே தூதரகத்தின் முன்றலை அடைந்த இவர்கள், இன்னொரு படி மேலே சென்று, நோர்வே நாட்டின் தேசியக் கொடியை தீயிட்டுக் கொழுத்தினர்.

நோர்வேயின் தேசியக் கொடியை, எரித்து தமது மனக்கொதிப்பை வெளியிட்டு, ஆத்திரம் தீரக் கத்திய இவ் ஆர்ப்பாட்டக்காரர்கள், எரிந்துகொண்டிருந்த கொடியை, நோர்வே தூதரகத்தின் வளாகம் நோக்கி வீசினர். சமாதானத்தின் மீது நாட்டம் கொண்டவராக தன்னை அடிக்கடி பிரகடனப்படுத்திக் கொள்ளும் சந்திரிகாவின் பொலிஸ் படையினர் பார்த்துக் கொண்டிருக்கவே, இந்தக் காரியங்கள் நடந்தேறியிருக்கின்றன.

அது மட்டுமல்லாமல், சமாதானத்துக்கு எதிரான ஏழு கட்டளைகளை இவர்கள் இயற்றி, அதனை சந்திரிகா அரசிற்கும் எதிர்க்கட்சிக்கும் அனுப்பிவைத்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் பேசுதல் கூடாது. அவர்களை இராணுவ ரீதியாக நசுக்குதல் வேண்டும்.

நோர்வே உட்பட எந்தப் பிற நாட்டுத் தலையீடும் மத்தியஸ்துவத்தின்பேரால் இங்கு இடம் பெறக்கூடாது.

வடக்குக் கிழக்கு தமிழர்களின் தாயகபூமி என்ற தமிழரின் நிலைப்பாட்டை நிராகரிக்க வேண்டும்.

ஒற்றை ஆட்சியின் கீழ், உச்ச அதிகாரம் கொண்ட பாராளுமன்ற முறை அமுல்படுத்தப்படவேண்டும்.

இது போன்று, ஏழு தீர்மானங்களை இந்தப் பேரினவாதிகள் இயற்றி அதை ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் அனுப்பிவைத்திருக்கின்றனர்.

பௌத்த பிக்குகளின் இந்த ஊர்வலத்தின் போது இன்னுமொரு வன்முறைச் சம்பவமும் நடைபெற்றிருக்கின்றது. பி.பி.சி. சிங்கள சேவையின் கொழும்பு முகவர் பொன்னாண்டோ அவர்கள், இந்தப் பேரினவாதிகளால் தாக்கப்பட்டிருக்கின்றார். விடுதலைப் புலிகளுக்கு சார்பாக பி.பி.சி. யின் சிங்கள சேவை செயற்பட்டுவருவதாக ஆத்திரம் கொண்டே இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. பி.பி.சி. சிங்களச் சேவை விடுதலைப் புலிகளின் நண்பன்? என்றும், ஆர்ப்பாட்டக் காரர்கள் கோசமெழுப்பினர்.

சரி இதுதான் நடந்துவிட்டது. நாட்டின் தலைவி, மற்றும் சமாதானத்தின்மீது தீவிர விருப்புக் கொண்டவர் என்ற அடிப்படையில், சந்திரிகா, மேற்படி சமாதான விரோதிகளை சுற்றிவளைத்து சிறையுள் தள்ளவும், சட்டத்தின் முன் நிறுத்தவும் கட்டளையிட வேண்டாமா?

சமாதான விரோதிகளை, விலங்கிட்டு, சட்டத்தின்முன் நிறுத்துங்கள் என, அவர் தனது பொலிஸாருக்கு கட்டளையிடவில்லை. மாறாக, மேற்படி சமாதான எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசவிரும்பவதாக அழைப்பு விடுத்திருக்கின்றார். இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு தலைமை தாங்கும் முக்கிய பௌத்த மதத் துறவிகளைச் சந்தித்து, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த அவர் துடிக்கின்றார். அவர்களின் மேலான கவனத்திற்கு, சந்திரிகா அனுப்பிவைத்த செய்தியில், உங்களின் இருப்பிடத்திற்கே வந்து உங்களுடன் கலந்துபேச விருப்பம் இருந்தாலும், பாதுகாப்புக் காரணங்களுக்காக அவ்விதம் நேரில் வரமுடியவில்லை. உங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லையானால், அலரி மாளிகைக்கு நேரில் வருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன் என, அழைப்பு விடுத்திருக்கின்றார்.

**பரகசிகமாகத் தெரிவிக்க முடியாத அரசாங்கத்தின் சமாதானம் பற்றிய இரகசிகங்களை, பௌத்த பிக்குகளிடம் இரகசிகமாக நேரில் தெரிவிக்க அவர் விரும்புகின்றார் எனத் தெரிகின்றது**

பரகசியமாகத் தெரிவிக்க முடியாத அரசாங்கத்தின் சமாதானம் பற்றிய இரகசியங்களை, பௌத்த பிக்குகளிடம் இரகசியமாக நேரில் தெரிவிக்க அவர் விரும்புகின்றார் எனத் தெரிகின்றது.

முன்னைய காலங்களைப் போல் தற்போது இல்லை. உலகம் விழித்திருக்கின்றது என்று, பௌத்த பிக்குகளுக்கு உலக நிலவரங்களை எடுத்து விளக்கி, சற்று 'அமத்தி' வாசியுங்கள் என்று அவர் வேண்டுகோள் விடுக்கக் கூடும்.



முன்னைய காலங்கள் போன்று தற்போது இல்லை. தமிழர்களும் விழித்திருக்கின்றார்கள், புலிகளும் விழித்திருக்கின்றார்கள், கூடவே உலகமும் பார்த்துக்கொண்டிருக்கின்றது என்ற கசப்பான உண்மையைத் தெரிவிக்க, சமாதானத்துக்கு எதிரானவர்களிடம் தேதி கேட்டிருக்கின்றார் சந்திரிகா.

இலங்கைத் தீவு பௌத்தமதத்திற்குச் சொந்தமானது எனக் கூறிக்கொண்டு, ஒரு தேசிய இனத்திற்கு எதிராக இனஅழிப்பு யுத்தமொன்றை நடத்திவரும், சிங்களப் பேரினவாதம், மொத்தத்தில் பௌத்தத்தைநாடுகடத்திக்கொண்டிருப்பது தெரிகிறது. ■

## அழைப்பும் மறுப்பும்!

நோர்வே நாட்டின் தேசியக் கொடியை எரிக்கும் அளவிற்குப் போய்விட்ட, சமாதான எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை சமாதானப்படுத்துவது முக்கியமாகப் படுகின்றது சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கு. இந்த சமாதான எதிர்ப்புப் போராட்டக்காரர்களுக்கு தலைமை தாங்குபவர்களாக பௌத்த மதத்துறவிகளே இருப்பதால், அவர்களை அழைத்து விளக்கம் கொடுக்க சந்திரிகா விரும்பினார். சமாதானப் பேச்சுவார்த்தை எதற்கு? ஏன் நோர்வே அரசின் துணை நாடப்பட்டது? சமாதானப் பேச்சுவார்த்தையை எவ்வளவு தூரத்திற்கு முன்னெடுத்துச் செல்வது? தமிழர்களின் உரிமைகள் என்னும்போது.. அதன் எல்லைகள் என்ன? இப்படியாக பலதரப்பட்ட விடயங்களை, தனது அரசாங்கம் இது விடயங்களில் உள்ளார்ந்தமாகக் கொண்டுள்ள நிலைப்பாடுகளை, பகிரங்கமாக வெளியிட சிறிலங்கா அரசுக்கு சங்கடம். ஆகையால், அதனை அவர்களிடம் நேரடியாகவும் இரகசிமாகவும் தெரிவிக்க சந்திரிகாவிற்கு அவசியம் ஏற்பட்டிருக்கலாம். அதற்காக அவர், நான்கு பௌத்த மகாநாயக்கர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். 'நேரில் உங்கள் கோவில்களுக்கு வந்து கலந்துரையாட பாதுகாப்புக் காரணங்கள் இடந்தரவில்லை. ஆதலால், அலரி மாளிகைக்கு உங்களை பணிவுடன் அழைக்கின்றேன்' என்று தகவல் அனுப்பியிருந்தார்.


கூடிக்கதைத்த நான்கு மகாநாயக்கர்களும், சந்திரிகாவின் அழைப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என, பதில் அனுப்பியிருக்கின்றனர். காலம் பிந்திய அழைப்பு என்பது அவர்களது கோபம். புலிகளின் விடயத்தையும் தமிழர்களின் விடயத்தையும் பேச்சுவார்த்தை விடயத்தையும் முன்கூட்டியே தம்முடன் கதைத்திருக்கவேண்டுமாம் மகாநாயக்கர்கள். ●

# தமிழீழத் தேசியத் தலைமையை அழிக்க இடப்பட்ட திட்டம் அம்பலம்

இந்திய இராணுவம் தமிழீழ மண்ணைவிட்டு வெளியேறி பத்தாண்டுகள் கடந்துவிட்டன. தமிழீழத்திற்கு இந்தியப்படை அனுப்பப்பட்டதில் இருந்து, அது வெளியேறிக்கொண்டதுவரையான காலத்தை, இந்த விடயத்தோடு சம்பந்தப்பட்ட இந்தியத் தளபதிகள், இராஜதந்திரிகள் மீள்பார்வை செய்கின்றனர். இந்த வரலாற்றுத் தவறுக்கு யார் காரணம் என்பதில், அவர்கள் ஒருவரை யொருவர் குற்றஞ்சாட்டும் போக்கே காணப்படுகின்றது. தமிழீழத்தில் இருந்து இந்தியப்படை வெளியேறிக்கொண்டதன் பத்தாண்டு நிறைவையொட்டி rediff.com என்ற இந்தியக் கணணி செய்திவலை ஊடகம், இந்திய அமைதிப்படையின் முன்னாள் தளபதிகளிடம் இருந்தும், இராஜதந்திரிகளிடம் இருந்தும் செவ்விகளைப் பெற்று வெளியிட்டிருந்தது. அது சிலசமயங்களில் விவாத அரங்கம்போலவும் தென்பட்டது.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரை, ஒரு உணர்ச்சிகரமான உண்மை ஒன்றும் இந்தப் பகுதியில் வெளிப்பட்டிருக்கின்றது. அது என்னவென்றால், இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் வெடிப்பதற்கு முன்னராகவே, தமிழீழத் தேசியத் தலைமையை அழித்துவிட நாசகாரத் திட்டம் வகுக்கப்பட்டது வெளிப்பட்டுள்ளது. இதுவிடயத்தில், முன்னாள் இந்திய அமைதிப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் கர்கிறற் சிங்கிற்கும், முன்னாள் இந்தியத்தூதர் டிக்சிற்றிற்கும் இடையே, வாதப்பிரதிவாதமே நிகழ்ந்துள்ளது. மறைக்கப்பட்ட இந்த உண்மையை அவர்களின் வாக்குமூலமாகவே எமது வாசகர்களுக்குத் தருகின்றோம்.

## இந்திய அமைதிப்படையின் முதல் தளபதி மேஜர் ஜெனரல் கர்கிறற் சிங்



மேஜர் ஜெனரல் கர்கிறற் சிங்

நான் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களுடன் ஆயுத ஒப்படைப்பு சம்மந்தமாகக் கதைப்பதற்கு லெப் ஜெனரல் தீபெந்தர் சிங்கினால் உத்தரவிடப்பட்டேன்.

இந்தியாவிலிருந்து பலாலி விமானத் தளத்திற்கு விமானம் மூலம் வந்தடைந்த திரு. பிரபாகரனையும் அவரது சகாக்களையும் நானே பாதுகாப்பாக வரவேற்று அழைத்துச் சென்றேன். அவர் சாதாரண மனிதரல்ல அவருடைய பாதுகாப்பு என்பது அவசியமான ஒன்றாகும். அவரிடம் எந்த பந்தாவையும் நான் காணவில்லை. எளிமையான மனிதர்.

நான் பிரபாகரனைச் சந்திப்பதற்கு எனது உலங்குவானூர்தியில் சென்று யாழ்ப்பாணம் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் இறங்கி அவரது அலுவலகத்திற்குச் சென்றேன். அவருடன் ஐந்து மணித்தியாலங்களுக்கு மேல் உரையாடினேன். அவர் தமது ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு ஒப்புக்கொண்டார். எழுத்து மூலமும் உறுதிப்படுத்தினார். அதன்போது 'ஜெனரல் நான் உங்கள் தேசத்தை நம்புகிறேன், உங்கள் பிரதமருடன் நாங்கள் கதைத்ததன் பிரகாரம் நாம் நடப்போம்.' என்றும் கூறியிருந்தார்.

ஆயுத ஒப்படைப்பு நிகழ்வு ஒகஸ்ட் ஐந்து 1987இல் ஆரம்பமானது. திரு. பிரபாகரன் தாம் இந்நிகழ்விற்கு வரமுடியாது என்றும் தமது தளபதி யோகி அவர்கள் ஆயுத ஒப்படைப்பிற்கு வருவார் என்று ஏற்கனவே எனக்கு அறிவித்திருந்தார். இது சரியான ஒரு முடிவு என்றே நான் கருதினேன். ஏனெனில் ஒரு நாட்டின் பிரதமர் தமது பிரதிநிதியாக தமது அமைச்சர் ஒருவரை அனுப்புவதை ஒத்ததாகும் இச்செயற்பாடு. விடுதலைப் புலிகளின் ஆயுத ஒப்படைப்பு தீடீரென ஸ்தம்பிதமடைந்தது.

ஏனெனில் றோவும் இந்திய அரசும் மற்றைய தமிழ்க்குழுவான ஈபிஆர்எல்எவ்விற்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தவில்லை. இதனை இந்திய வெளிவிவகார அமைச்சும் நன்கறிந்திருந்தது. டிக்சிற்றும் நன்கறிந்திருந்தார். இதனை நிறுத்துவதற்கு எவரும் முன்வரவில்லை. இதனால் ஆயுத ஒப்படைப்பு நிகழ்வின் உண்மைத்தன்மை பாழடைந்தது. கறைபடிந்த திருப்பமொன்று ஏற்பட்டது.

நான் இது சம்மந்தமாக எனது இராணுவ தலைமைக் காரியாலயத்திற்கும் அறிவித்திருந்தேன். ஆனால் எனது முறையீட்டிற்கு எதுவித பதிலும் இல்லை. அப்போதைய இந்தியத் தலைமை இராணுவத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜி இது பற்றி அக்கறையே காட்டவில்லை. புலிகளுக்கு எதிரான ஏனைய குழுக்களினது அட்டகாசம் பெரும் பிரச்சனையை உண்டாக்கியது. அவர்கள் பெருந்தொகையான தமிழ் முஸ்லிம் மக்களைத் துன்புறுத்தினார்கள். சிங்கள அரசு குடியேற்றங்களை அமுல்ப்படுத்தியது. நாங்கள் வெறும் பார்வையாளர்களாகவே இருந்தோம். இந்நிலையில் திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது. நான் அவரை சந்திப்பதற்கு சென்றேன் ஆனால் புலிகள், தமிழ்மக்கள் இந்திய அமைதிப்படை மீது பெரும் கோபத்துடன் இருக்கிறார்கள் நீங்கள் வரவேண்டாம் என்று திருப்பிவிட்டனர். திலீபனுக்கு எதுவித உறுதிமொழியும் இந்தியப் பிரதமர் ராஜீவிடமிருந்து வராத நிலையில், நான் இந்திய உயர்ஸ்தானிகர் திரு ஜே.என். டிக்சிற் அவர்களை வந்து பேச்சுக்களில் ஈடுபடுமாறு கோரினேன். ஆனால் அவர் வரமறுத்து பின்வாங்கினார். இறுதியாக அவர் வந்தபோது திலீபன் இறந்து விட்டார். நாங்கள் மனம் வைத்திருந்தால் நிச்சயமாகத் திலீபனின் உயிரைக்காப்பாற்றியிருக்க முடியும்.

இதன் பின்னர் இடம்பெற்ற "கடற்புறா" படகுச் சம்பவம் தொடர்பாகவும் திரு. பிரபாகரனைச் சந்தித்தேன். அதன்போதான பேச்சுக்களை ஒளியிழை நாடாவில் பதிந்து உடனடியாக எமது தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பினேன். இருந்தும் என்ன பிரயோசனம்?

ஒவ்வொரு தடவையும் திரு. பிரபாகரனைச் சந்தித்தேன். ஏனெனில் அவர் எந்தப் பிரச்சனையையும் இதயசுத்தியுடன் அணுகக் கூடியவராக இருந்தார். ஆனால் பல தடவைகள் அவருக்கு நாங்கள் ஏமாற்றத்தையே கொடுத்தோம். திரு. பிரபாகரன் என்னிடம் சிறீலங்காக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட 17 போராளிகளையும் சிறீலங்கா அரசு கொழும்புக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு கொண்டு செல்லப்பட்டால் அவர்களைச் சிறீலங்கா அரசு சித்திரவதை செய்து கொன்றுவிடும் என்று தெளிவுபடக் கூறியிருந்தார்.

இவ்வேளையில் டிக்சிற் புதுடில்லியிலிருந்து கொழும்பிற்கு குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 17 புலிகளை விடுவிப்பது சம்மந்தமாக சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு விரைந்து வந்தார். அவருடன் தளபதி தீபேந்தர் சிங்கும் பேச்சுவார்த்தைக்கு வந்திருந்தார்.

ஆனால் அவர்களால் ஜெயவர்த்தனாவைச் சம்மதிக்கவைக்க முடியவில்லை. அவர் அவர்களைவிட வெகு கெட்டிக்காரராய் இருந்தார். எமது அதிகாரிகள் ஜெயவர்த்தனாவிடம் 17 பேருக்கும் பொது மன்னிப்பளிக்கும்படி வேண்டினர். எதுவும் பலனளிக்கவில்லை. இறுதியாக எனக்கு 17 பேரினது பாதுகாப்பையும் சிறீலங்காப் படைகளிடம் ஒப்படைக்கும்படி உத்தரவு வந்தது. நான் பெரிதும் ஏமாற்றமடைந்தேன். சிங்கள அரசிடம் தாம் ஒப்படைக்கப்படப்போவது பற்றி அறிந்த 17 இளைஞர்களும் சயனைட் அருந்தினர். இதில் 12 பேரை இந்திய சிறீலங்கா ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்திய அமைதிப்படையால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

நான் பெரும் துன்பம் அடைந்தேன். இறந்தவர்களில் குமரப்பா திருமணமாகி சில நாட்களே ஆகியிருந்தது. புலேந்திரன் வீரமான மனிதர் அவரைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி பலதடவைகள் சிறீலங்கா பாதுகாப்புச் செயலரினால் நான் வற்புறுத்தப்பட்டேன். நான் இந்தப் போராளிகளுடன் பல நாட்களைக் களித்திருக்கிறேன். அருமையானவர்கள் அவர்களைக் காப்பாற்றமுடியாமல் போனதையிட்டு பெரும் வேதனையும் வெட்கமுமடைகிறேன். இது தொடர்பாக திரு. டிக்சிற் நான் தவறிழைத்தாகக் கூறியுள்ளார்.

திரு. பிரபாகரன் அவர்களுடன் நான் பேச்சுகளில் ஈடுபட்டபோது பிரபாகரனையும் அவர்களது சகாக்களையும் சுட்டுக் கொன்றுவிடும்படி திரு. டிக்சிற் அவர்கள் ஒரு தடவை எனக்கு உத்தரவிட்டார் நான் மறுத்துவிட்டேன். வெள்ளைக்கொடியின் கீழ் எவரையும் கொல்லும் எண்ணம் எமக்கில்லை என்பதை நன்கு அவருக்கு வலியுறுத்தினேன்.

இந்த 12 பேரின் மரணத்திற்கு இந்திய இராணுவத் தலைமையும், இந்திய இராஜதந்திரிகளுமே பொறுப்பு. என்னை அவர்கள் கட்டுப்படுத்தியமையாலேயே என்னால் அவர்களைக் காப்பாற்ற முடியாமற் போய்விட்டது. டிக்சிற்றிற்கு பாரதப் பிரதமர் சிறீலங்கா சம்மந்தமாக முடிவெடுப்பதற்கு முழு அதிகாரத்தையும் வழங்கியிருந்தார். அவர் சிறீலங்காவின் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் கோரிக்கைக்கு செவிசாய்க்காது இருந்திருந்தால் மீண்டும் ஒரு அழிவு ஈழத்தில் ஏற்படுவதைத் தவிர்த்திருக்கலாம். ●



தமிழீழத் தேசியத்தலைவருடன் ஜே.என் டிக்சிற், மேஜர் ஜெனரல் கர்கிறற் சிங்

## இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதர் டிக்சிற்



ஜே.என் டிக்சிற்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க நான் உத்தரவிட்டதாகக் கூறும் தளபதி கர்கிறற் சிங்கின் குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் இல்லை. இராஜதந்திர வேலைகளில் ஈடுபடும் ஒரு உயர்ஸ்தானிகர், எவரையும் கொல்வதற்கு உத்தரவிடுவது என்பது முடியாதகாரியம்.

அதுவும் கர்கிறற் சிங் குறிப்பிடும் காலகட்டமான 1987இல் நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தேன். அவர்களுக்கு இன்னல் இளைப்பதற்கு எதுவித காரணமுமில்லை.

இதில் ஒன்றை நாம் கருத்திற் கொள்ளவேண்டும். தளபதி கர்கிறற் சிங் பொறுப்பாளராக இருந்தபோதே சிறீலங்காக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட 17 புலிகளும் பலாலியில் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டனர். இவர்களைப் பாதுகாக்க கர்கிறற் சிங்கின் பொறுப்பில் இருந்த இந்தியப்படையினர் தவறிவிட்டனர். இதுவே இந்திய புலிகள் உறவில் பாரிய விரிசலை ஏற்படுத்தியது.

தளபதி கர்கிறற் சிங்கின் கூற்றில் எதுவித உண்மையுமில்லை. பழிவாங்கும் தன்மையே மிகுந்து காணப்படுகிறது

அவர் பதவியை விட்டு வெளியேறியதற்கு நான் காரணமென நினைக்கிறார். அதனால் அபாண்டமான குற்றச்சாட்டுக்களை என் மீது சுமத்துகிறார். ஒரு அரசகுடியியல் அதிகாரி என்ற வகையில், அரசாங்கத்தின் அனுமதியின்றி, இராணுவத்திற்கு தன்னிச்சையாக உத்தரவிட முடியுமா? இதற்கு இந்தியச் சட்டம் இடமளிக்குமா? என்பது நம் முன் எழுகின்ற முதற் கேள்வியாகும். ●

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதர் டிக்சிற் மீது, பாரிய குற்றச்சாட்டொன்றை, கர்கிறற் சிங் சுமத்தியிருக்கின்றார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் சகாக்களையும் கொன்றுவிடும்படி அவர் தனக்கு உத்தரவிட்டதாக அவர் பகிரங்கமாகவே குற்றம் சுமத்தியிருக்கின்றார். இதனால் ஆடிப்போயிருக்கின்ற டிக்சிற்றோ. இதனைக் கடுமையாக மறுக்கின்றார். அவர் என்ன சொல்லுகின்றார்.

## எமது கேள்வி

இந்த விடயத்தில், கர்கிறற் சிங் தெரிவித்த குற்றச்சாட்டுச் சரியா? அல்லது டிக்சிற்றின் மறுப்புச் சரியா? என்பது பெரும் கேள்வியாக விரிகின்றது. டிக்சிற் குறிப்பிட்டிருப்பதுபோல தனது சுயாதீனமான உத்தரவாகவல்லாமல், அன்றைய இந்திய அரசாங்கத் தலைமையின் உத்தரவின்பேரில் இக்கட்டளையை அவர் பிறப்பித்தாரா?

## அன்னை பூபதி நினைவாக...

# பெண்ணினத்திற்குக் கிடைத்த பெருந்தலைவி






*தண்மைபெறத் தமிழீழம் தன்னை ஈந்தாள்*
*திசையனைத்து மேவணங்குந் தாயனாள்*
*பெண்ணினத்திற் குக்கிடைத்த*
*பெருந்தலைவி*
*"பூபதியாள்" இனவெழுச்சி வடிவந்தானோ?*
*விண்ணுயர்ந்த தற்கொடையதாலே அன்னை*
*வென்றனளே மண்பெருமை மகிமை காத்து*
*பண்டைநாளாக இந்தக் காலம் மாறிப்*
*போகையிலும் "பூபதியாள்'' நாமம் ஓதும்.*

*அச்சமது இல்லையெனில் சாவை வென்றே*
*அற்புதங்கள் செய்திடலாம்! அவ்வாறேதான்*
*துச்சமெனக் கொண்டனளே உயிரை*
*அன்னை*

*தோளினிலே தூக்கினளே "அகிம்சை'' தன்னை*
*பச்சைமரத் தாணியன்ன உணர்வை நெஞ்சில்*
*பதிப்பித்தாய் புதுப்பித்தாய் புதுமை செய்தாய்!*
*இச்சகத்தில் அழியாத வரலாறொன்றை*
*இயற்றினையே இனியபுகழ் நிலைக்கு மாறு!*

*அகிம்சையது வீழவில்லை; இந்தி வல்ல!*
*அரசதுவே தோற்றதுவாம்; உலக மெங்கும்*
*முகடுகளில் முழங்கியது அறத்தின் வன்மை*
*மூழ்கியது; திணறுவது இந்தி யாவே*
*முகிலினங்கள் மழையாகி அழிதல் போலே*
*முடிவெடுத்தாய் பயிர்செழித்து வாழ்வதற்கே*
*எகிறிப்பாய்த் தீகத்தின் உச்சம் சென்றாய்*
*எழுவான்க ரையெழுந்த தாயே வாழி!*

*"கோட்சே'' க்கே உறவானோர் எங்கள் சொந்தக்*
*குடிமீது படைகொண்டார் அவரெ லும்புக்*
*கட்டுக்குள்ளே இதயம் குறுகிப் போச்சா?*
*"காந்தியம்'' இந்திக்கு மறந்தே யாச்சா?*
*மீட்போளாய்ப் பசிதின்றாய் திங்க ளொன்றாய்*
*மாமாங்கப் பதியினிலே முடியைக் கொண்டாய்*
*வீட்டினின்று வெளிநடந்தாய் நாட்டிற் காக*
*விடுதலைக்குப் "புதியபுறம்'' கண்டாய் வாழி!*

*- இளந்திரையன் -*

# ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் 56வது கூட்டத்தொடர்

ஐ.நா மனித உரிமை ஆணைக் குழுவின் 56வது கூட்டத் தொடர் கடந்த மாதம் 20ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. வழமைபோல் நாடுகளின் பிரதிநிதிகள் (தூதுவர்கள்), அரசசார்பற்ற நிறுவனங் கள், மற்றும் மனித உரிமை அமைப் புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

தமிழீழ மக்கள் மீது சிறீலங்கா அரசினால் திட்டமிடப்பட்டு மேற்கொள் ளப்படும் மனித உரிமைமீறல் நிகழ்வு களான கைது, சித்திரவதை, கொலை, கற்பழிப்பு, பொருளாதாரத்தடை, சிங் களக் குடியேற்றங்கள் போன்றவற்றை தமிழீழ மக்கள் சார்பில் பல வழக் கறிஞர்கள், கல்விமான்கள் பல அரசசார் பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் தமி ழர் மனித உரிமை மையம் - TCHR போன்றவை, இக் கூட்டத்தொடரில் பங் களிக்கும் சர்வதேச பிரதிநிதிகளுக்கு அறிக்கைகள், உரைகள் மூலம் விளக்கி வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக, அமெரிக்கா வில் தனது தலைமைக் காரியாலயத் தைக் கொண்ட சர்வதேச கல்வி நிறு வனத்தின் பிரதம இயக்குனர் திருமதி. கரன் பார்க்கர் இக் கூட்டத்தொடரில் பேசுகையில் கூறியதாவது "எமது நிறுவனத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய வரும் எமது நெருங்கிய நண்பருமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 5ஆம் திகதி சிறீலங்காவின் தலைநகரான கொழும்பில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரபல வழக்கறிஞரும், துணிச்சலும், சலிப்புமற்ற மனித உரிமையின் காவலர் திரு. பொன்னம்பலம் அவர்கள், இலங் கைத்தீவின் பழம்பெரும் அரசியற்கட்சி யின் செயலாளராக விளங்கியவர். திரு. குமார் பொன்னம்பலம் இவ்வாணைக் குழுவில் எமது நிறுவனம்சார்பில் பல தடவைகள் சமூகமளித்து சிறீலங்கா அரசி னால் தமிழீழ மக்கள் மீது ஏற்படுத்தப்பட் டுள்ள மனித உரிமை மீறல்களை எடுத் துரைத்தவர். அவர் மனைவிக்கு சிறீ லங்கா ஜனாதிபதியால் அனுப்பப்பட்ட அனுதாபக் கடிதம் அவர் உயிருடன் இருக்கும் பொழுதே தயாரிக்கப்பட்ட ஒன்று. இக்கடிதம் பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. இக் கொலைபற்றி இவ்வாணைக்குழு கவனத்தில் எடுக்க வேண்டும்.

அதேவேளை சிறீலங்காவுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நடைபெறும் யுத்தம் பற்றி இங்கு சில விடயங்களைக் கூற விரும்புகின்றேன்.

முதல் விடயமாக அண்மைக் காலங் களில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிர மிக்கக் கூடிய மகத்தான இராணுவ வெற்றி களைப் பெற்றுள்ளனர். நான் இன்று இங்கு பேசிக் கொண்டிருக்கும் வேளை யில் அவர்கள் மேலும்பல இராணுவ வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருக்கின் றார்கள். தமிழர் பிரச்சனையை ஒரு போதும் சிறீலங்கா அரசின் இராணுவரீ தியான அணுகுமுறை மூலம் வெற்றி கொள்ளமுடியாது என்பதை நான் முன்பு இங்கு பல தடவை கூறியுள்ளேன். தமிழ ருடைய சுயநிர்ணய உரிமையை அங்கீ கரிக்கும் ஓர் அரசியல்தீர்வை சிறீலங்கா அரசு முன்வைக்க வேண்டும்.

இரண்டாவது விடயமாகத் தற்சமயத் தில் மிகவும் துணிச்சலுடன் மனிதாபிமான அடிப்படையில் நோர்வே நாடு இப்பிரச் சனையை நீண்ட பார்வையுடன் தீர்க்கும் நோக்குடன் ஓர் நடுவராக சிறீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை களை ஆரம்பிக்க முனைகிறது. நோர்வே நாட்டின் முயற்சிகளுக்கு இவ்வாணைக் குழு எவ்வழிகளில் உதவி செய்யமுடி யுமோ அதைச் செய்ய முன்வரவேண்டும்" என்று கூறினார்.

சர்வதேச சமாதானசபையின் சார்பாக திரு. கிருபாகரன் அவர்கள் பேசுகையில்,

"நான் இங்கு பேசிக் கொண்டிருக்கும் அதேவேளை - சிறீலங்கா இராணுவத்தி

## சுட்டி

னால் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் மனிதக் கவசமாக (Human shield) யுத்தப்பிரதேசங்களில் ஒன்றான யாழ் குடாநாட்டின் தென்பகுதியில் - பாவிக் கப்படுகின்றனர். அவர்களில் 80 வீதமா னோர் சிறு பிள்ளைகளும் குழந்தைகளு மாவர்! கர்ப்பிணித்தாய்மார்கள், கடு மையாக நோய்வாய்ப்பட்டவர்களும் இதில் அடங்குவர். அத்துடன் சிறீலங்காக் கடற் படை, இராணுவத்தினரின் கண்மூடித்தன மான எறிகணை வீச்சினால் பெருந் தொகையான அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் இடம் பெயர்ந்துமுள்ளனர். சர்வதேச சமாதான சபை சார்பாக நாங்கள் இந்த 56வது கூட்டத்தொடரில் கேட்டுக் கொள்வதாவது, மனிதாபிமான அவசர உதவி அமைப் புக்களான சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் (ICRC), அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அமைப்பு (UNHCR) ஆகியவை உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு, சிறீலங்கா அரசின் ஒழுக்கமற்ற இராணுவத்திட மிருந்து அப்பாவி மக்களைக் காப்பாற்ற வேண்டும்."

அவர் மேலும் கூறுகையில் "சிறீலங்கா அரசாங்கத்தின் முக்கிய, அதிஉயர் பதவிகளான பிரதமமந்திரி, ஜனாதிபதி ஆகியவற்றில் முறையே தாயும், மகளும் ஆட்சி நடத்துகின்றனர். பெண்கள்மீதான வன்முறைகளுக்கு எதிரான ஐ.நா அமைப்பின் பிரதிநிதியாகவும் சிறீலங்கா நாட்டைச் சேர்ந்த பெண்மணியே நியமிக் கப்ட்டுள்ளார். ஆனால் இப்படியான மூன்று முக்கிய அதிகாரங்களில் பெண் கள் இருக்கின்ற இலங்கைத்தீவில், பெண் கள் மீதான வன்முறைகள் மிகவும் மோச மாகப் பிரயோகிக்கப்படுகின்றன."

அத்துடன் திரு. கிருபாகரன் அங்கு சுட்டிக்காட்டுகையில், "தமிழர் மனித உரிமை மையத்தின், (TCHR) புள்ளி விப ரத்தின்படி, இலங்கைத் தீவில் ஒவ்வொரு பதினாறு நாட்களுக்கு ஒருமுறை ஒரு தமிழ் பெண்ணும், ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒரு தமிழ்ப்பெண் சிறுமியும் சிறீலங்காப் பாதுகாப்புப்படை களால் பாலியல்வன்முறைக்கு உள்ளாக் கப்படுகின்றார்கள். அதைவிட ஒவ்வொரு

தொடர்ச்சி 11ம் பக்கம்


வீர வணக்கம்

# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

சிங்களப் படையினருடன் தனங்கிளப்புப் பகுதியில் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

- **வீர.வே.அன்ரன் அல்லது அன்பு**
  (சுந்தரலிங்கம் அசோக்குமார், யாழ்ப்பாணம்)

வவுனியா விளக்குவைத்தகுளம் பகுதியில் இடம் பெற்ற மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

- **2- லெப்.தமிழரசு அல்லது இளங்குயில்**
  ( நடராசா ஜெகதீஸ்வரன், கிளிநொச்சி)

இயக்கச்சி மற்றும் முகாவில் பகுதிகளில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள்.

- **வீர வேங்கை சோழநிலவன்**
  (முத்தையா கிருபாகரன், கிருஷ்ணபுரம் கிளிநொச்சி)
- **லெப்.கேணல் புவிதா**
  (நடேசு நிர்மலாதேவி, பூநகரி)

உமையாள்புரம் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தின்போது இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டர்கள்.

- **2ம் லெப்.கயல்சோழன்**
  (சிவநாதன் ஆனந்தன், திரு கோணமலை),
- **வீர வேங்கை மதியரசன்**
  (இரட்ணம் இன்பராஜ், யாழ்ப்பாணம்)

தொடரும் ஓயாத அலைகள் - 3 தாக்குதலில் 26ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளில் ஒருபகுதியினரின் பெயர் விபரங்கள்.

- **கரும்புலி மேஜர் தனுஷன்**
  (தம்பிராஜா - இலங்கேஸ்வரன், திருகோணமலை)
- **கரும்புலி மேஜர் சுதர்ஷினி**
  (தெய்வேந்திரம்பிள்ளை-ஜெயசுகி, யாழ்ப்பாணம்)
- **மேஜர் சொக்கன்**
  (சோமசுந்தரம்- இராஜேந்திரன், யாழ்ப்பாணம்)
- **2ம் லெப்டினட் சசி**
  (ஜோசப் - புவனேஸ்வரி, வட்டக்கச்சி)
- **கப்டன் சுடர்விழி**
  (தர்மபாலா - சுதர்ஷினி, யாழ்ப்பாணம்)
- **லெப். அன்புவேங்கை**
  (கருணாகரன் - அமுதா, முள்ளியவளை)
- **கப்டன் அன்புவிழி**
  (பூபாலசிங்கம் - லீலாவதி, யாழ்ப்பாணம்)
- **லெப். அன்பரசி**
  (கந்தையா - மோகனாம்பிகை, இராமநாதபுரம்)
- **2ம் லெப். உமா**
  (கந்தையா - பாமினி, பூநகரி)
- **மேஜர். கோகிலா**
  (இராசதுரை - யசோதாரிணி, நெடுங்கேணி)
- **வீர வேங்கை தென்னவன்**
  (கந்தசாமி - சந்திரமோகன், மன்னார்)
- **வீர வேங்கை கீர்த்திகா**
  (நடேசபிள்ளை - நந்திதேவி, திருகோணமலை)
- **வீர வேங்கை இளந்திரையன்**
  (இராமசாமி - சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம்)
- **வீர வேங்கை ஆறுமுகம்**
  (கந்தசாமி - நாகேந்திரன், யாழ்ப்பாணம்)
- **வீர வேங்கை மதியன்**
  (இராமச்சந்திரன் - இலங்கேஸ்வரன், வவுனியா)
- **வீர வேங்கை ஈழச்செல்வன்**
  (இராமசாமி - சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம்)
- **வீர வேங்கை பாவை**
  (ஜேம்ஸ் - ரமேஷ், யாழ்ப்பாணம்)
- **வீர வேங்கை கவியான்**
  (வெள்ளையன் - யுவராஜேஸ்வரன், திருமலை)
- **கப்டன் துரியோதனன்**
  (ஆனந்தகுமாரசாமி - சர்மிலன், யாழ்ப்பாணம்)
- **வீர வேங்கை வாணி**
  (அந்தோனி - லோகநாயகி, இரணைதீவு)
- **கப்டன். கண்ணதாசன்**
  (ஆறுமுகம் - கஜரூபன், மட்டக்களப்பு)
- **வீர வேங்கை வாணன்**
  (நல்லதம்பி - காந்தன், கிளிநொச்சி)
- **வீர வேங்கை இசையரசன்**
  (மாசிலாமணி - ஜேசுதாசன், யாழ்ப்பாணம்)
- **வீர வேங்கை அறிவழகன்**
  (இராஜேந்திரன் - பிரபாகரன், யாழ்ப்பாணம்)
- **வீர வேங்கை தேன்மொழியான்**
  (சண்முகம்- புஷ்பநாதன், கிளிநொச்சி)
- **வீர வேங்கை கௌதமி**
  (கந்தசாமி - ராதிகா, யாழ்ப்பாணம்)
- **வீர வேங்கை வைகை**
  (இரத்தினகோபால் - டயானா, கிளிநொச்சி)
- **வீர வேங்கை கானமலர்**
  (பிச்சையான் - கமலாதேவி, வவுனியா)
- **வீர வேங்கை பாக்கியன்**
  (தேவசகாயம் - ஜேசுதாசன், யாழ்ப்பாணம்)
- **வீர வேங்கை கருமுகிலன்**
  (பேரம்பலம் - கிருபாகரன், மல்லாவி)
- **வீர வேங்கை நாகன்**
  (சிதம்பரப்பிள்ளை-செந்தில்நாதன்)
  சிறப்பு எல்லைக் காவல் படை



# பேச்சுவார்த்தைகளை நடைபெறாமல் செய்து தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை தடுத்தல் சிறீலங்காவின் வழமையாக உள்ளது


## இது தான் வழமை என்றால் விடுதலைப் புலிகளை அங்கீகரித்து தமிழர் பிரச்சினைக்கு தீர்வைக் காட்டுதல் சர்வதேசக் கடமையாகும்?

தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை முயற்சிகளை முறியடிப்பதன் மூலம் இலங்கைத் தீவில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வைத் தடுப்பது என்பது சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களின் வரலாற்றுப் போக்காக உள்ளது.


புத்தாயிரம் ஆண்டு ஆரம்பமாகிய நேரத்தில் நோர்வே அரசாங்கத்தின் முயற்சிகளால் தமிழர் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை முயற்சிகள் மீளவும் புத்துயிர் பெறக் கூடுமென்ற ஒரு எண்ணம் சிலருக்கு இருந்தது. ஆனால் சிங்களத் தலைமைகளின் வரலாற்றைத் தெரிந்தவர்கள் இது எப்படிச் சாத்தியமாகக் கூடும்க் என்ற சந்தேகத்துடனேயே நோர்வேயின் முயற்சிகளை எடுத்து நோக்கினர். அவர்கள் சந்தேகம் நியாயமானதே என்பதற்கான அனைத்து அறிகுறிகளும் இலங்கைத் தீவில் வலுப்பெற்றுவிட்டது. சிங்களப் பேரினவாதத்தின் தலைமையைத் தனது பெருமையாகக் கருதும் சிங்களவர்கள் நோர்வேயின் முயற்சிக்கு எதிரான தங்கள் பச்சை இனவாதத்தை கொழும்பில் கக்கி வருகின்றனர். அவர்கள் கக்கும் இனவாதத் தீயில் நோர்வே நாட்டின் தேசியக் கொடி கருகியது என்பது கடைசிச் செய்தி. இந்த

> “சந்திரிகா தமிழர்களின் மேல் கொண்ட அக்கறையினால் நோர்வே நாட்டின் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடனான பேச்சுவார்த்தை முயற்சிகளை அணுகவில்லை.”

சிங்களப் பேரினவாதக் குழுக்கள் வேறு சிறீலங்கா அரசாங்கம் வேறு அல்ல. இரண்டுமே சிங்களப் பேரினவாதம் என்னும் நாணயத்தின் இருபக்கங்கள். அந்த வகையில் பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடும் வழக்கம் சிங்கள அரசாங்கங்களின் பழக்கம்.




Sunday Leader 27-02-00




சந்திரிகா தமிழர்களின் மேல் கொண்ட அக்கறையினால் நோர்வே நாட்டின் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடனான பேச்சுவார்த்தை முயற்சிகளை அணுகவில்லை. குறைந்துவரும் சர்வதேச ஆதரவை தனது அரசாங்கத்திற்கு கூட்டுவதற்கான முயற்சியாகவே அதனை அணுகினார். சிறீலங்காவுக்கு வழங்கப்படும் உதவிகள் யுத்தத்தை வலுப்பெறச் செய்கின்றது என்ற உண்மையை அரச சார்பற்ற நிறுவனங்கள் மனித உரிமை அமைப்புக்கள் அமைதிக்காக பாடுபட விரும்புவர்கள் ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச அரசுகள் என்பவற்றுக்குப் புலம்பெயர் தமிழர்கள் ஆதாரங்களுடன் எடுத்து விளக்கி வருவதினால் ஏற்படக்கூடிய நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் முயற்சியாகவே சந்திரிகாவின் இன்றைய அணுகுமுறைகள் அமைந்தன. நுனிநாக்கில நோர்வே பிரதிநிதியுடன் பேச்சுவார்த்தையில் அக்கறையுளள்வராகப் பேசிய அதே சந்திரிகாவின் அடிநாக்கில் படைதிரட்டல் படையெடுத்தல் என்ற நஞ்சு இருந்தமையை இலங்கைத்தீவில் இக்காலத்தில் அவர் செய்த செயல்கள் உறுதிப்படுத்தின. சந்திரிகாவின் செயலின் கோசமாகவே சிங்களப் பேரினவாதத்தின் நோர்வே தூதரகத்திற்கு முன்பான ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்புஊர்வலங்கள் கொடியெரிப்புக்கள் அமைகின்றன. உண்மையில் சந்திரிகா அரசாங்கம் எந்த இனவாத எதிர்ப்பு சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவோ அந்த சக்திகள் தமது அரசாங்கத்தின் கொள்கைகள் போக்குகள் சரியானவையே என உலகை நம்பவைக்க ஆடும் நாடகங்களே இந்த எதிர்ப்புக்கள்.

ஒவ்வொரு தடவையும் இவ்விதமான சிங்களப் பேரினவாதத்தை தூண்டிவிட்டு பேச்சுவார்த்தை முயற்சிகளை முறியடித்து தமிழர் பிரச்சினைக்கான தீர்வை சிங்கள அரசாங்கம் தடுத்துவிடும். 1995ஆம் ஆண்டு ஆரம்பமாகும் பொழுதும் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளில் நாட்டமுள்ளவராக சந்திரிகா தன்னை வெளிப்படுத்தினார். தமிழர்களின் நாளாந்த வாழ்வுக்கு உள்ள தடைகள் அச்சங்களை நீக்கிய பின்னர் அரசியல் பேச்சுவார்த்தை என்ற செயற்திட்டம் சந்திரிகா அரசாங்கத்தால் தமிழ் மக்களை கவர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் பிரித்தல் என்ற இராணுவநோக்கில் முன்வைக்கப்பட்டது. தடைசெய்யப்பட்ட சில அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடை நீக்கப்பட்டு விட்டதாக ஒரு அறிவிப்பு. ஆனால் எதையுமே அசையவிடாது இராணுவம் தடுத்தது. தமிழர்களின் புனர்வாழ்வுக்கு அள்ளி வழங்குவதாக மற்றொரு அறிவிப்பு. ஆனால் ஒரு சதம் கூட புனர்வாழ்வுக்கு வழங்கப்படவில்லை என்பது நடைமுறை.. எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களின் நடமாட்டத்துக்கு உயிர் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த பூநகரி முகாமை மூடி தமிழ் மக்களை அவர்களது சொந்த மண்ணில் சுதந்திரமாக நடக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டமையை தமிழர் மீதான யுத்தமொன்றுக்கான காரணமாக மாற்றினார் சந்திரிகா. 19.04.1995இல் போர் தவிர்ப்பு என்ற போர்வையில் தனது படைகளை பெருக்குதல் நவீனப்படுத்தல் விடுதலைப் புலிகளையும் தமிழர்களையும் தனிமைப்படுத்தல் என்ற சந்திரிகாவின் இராணுவ யுத்தி செயலிழந்தது.

> “சிங்கள சிறீலங்காவும் தமிழீழத் தனியரசும் எப்படி இலங்கைத்தீவில் இயங்கப் போகின்றன இரு தேசங்களும் இரு தேசியங்களும் எப்படி சுபீட்சத்துடன் வாழப் போகின்றன என்ற பேச்–சுவார்த்தை ஒன்றை விடுதலை வரலாறு தோற்றுவிக்கத்தான் போகிறது.”

எந்த பூநகரி முகாமை மூடி தமிழர்களின் நாளாந்த வாழ்வு வழமைக்கு திரும்புவதை சந்திரிகா மறுத்தாரோ அதே இராணுவ முகாமை தனது இராணுவத்தின் நலன் கருதி பின்னர் சந்திரிகா மூடிய வரலாறு சந்திரிகாவின் அத்தனை சமாதான வேடங்களுமே அவரின் இராணுவத்தின் நலனைப் பெருக்கும் உத்திகளாக உள்ளன என்பதை உலகிற்கு தெளிவாக்கியது.

தமிழர்களுக்கு பேச்சுவார்த்தை எப்பொழுதுமே சாதகமாக அமையும் என்பது சந்திரிகா

**பற்றிமாகரன்**

அரசாங்கத்திற்கு நன்கு தெரிந்த ஒன்று. ஆகையினால் பேச்சுவார்த்தைகள் ஏற்பட்டு தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட சந்திரிகா மட்டுமல்ல சிங்களப் பேரினவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த சிங்களத் தலைமைகளும் என்றும் இடமளிக்கமாட்டா என்பதை வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்றது. தமிழர்கள் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்துடன் பேசித் தமது பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுத்துவதை தடுக்கும் வகையில், டி. எஸ். சேனநாயக்கா பிரித்தானியா ஜி. ஜி. பொன்னம்பலத்தை பேச அழைத்தால் தாம் பிரித்தானியாவுக்கான ஆதரவை விலத்திவிடப் போவதாக 1945இல் அறிவித்து பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுவதை தடுக்கும் வழமையை ஆரம்பித்தார். அப்பொழுதும் சிங்களப் பேரினாதிகளின் எதிர்ப்பு அலைகளையே காரணமாக காட்டினர். செல்வா - பண்டா ஒப்பந்தம் செல்வா-டட்லி ஒப்பந்தம் என்பனவும் இதே சிங்களவர் எதிர்ப்பு என்ற காரணத்தை கூறியே கைவிடப்பட்டன. இந்த அனுபவங்களின் அடிப்படையில்தான் இனி எந்தப் பேச்சுவார்த்தையும் சிறீலங்காவுடன் இல்லை. அப்படிப்பேசுவதானால் அது தமிழர்களின் தாயகத்தை அங்கீகரிப்பது தொடர்பான பேச்சுவார்த்தையாகவே அது அமையவேண்டும் என தந்தை செல்வநாயகம் கூறினார்.

அவர் கூறியவாறான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறும் காலம் அன்று விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்டு விட்டது என்பது இன்றைய சிறீலங்காவுக்கு நன்கு தெரிந்த விடயம். ஆயினும் தனது படைகளை கொண்டு அதனை மாற்றியமைக்கலாம் என சிறீலங்கா பகற்கனவு கண்டு வருகிறது. சிறீலங்கா காண்பது பகற்கனவு தான் என்பதை ஓயாத அலை 3 நன்கு உணர்த்தி வருகிறது. விடுதலைப் புலிகளின் கைகளை நாம் பலப்படுத்தப் பலப்படுத்த எமது தாயக மண் மேலும் மேலும் விடுதலை பெற்று சிங்கள சிறீலங்காவும் தமிழீழத் தனியரசும் எப்படி இலங்கைத் தீவில் இயங்கப் போகின்றன இரு தேசங்களும் இரு தேசியங்களும் எப்படி சுபீட்சத்துடன் வாழப் போகின்றன என்ற பேச்சுவார்த்தை ஒன்றை விடுதலை வரலாறு தோற்றுவிக்கத்தான் போகிறது. புலம்பெயர் தமிழர்களாகிய நாம் வழங்கும் நிதியில் தான் இந்த காலத்தின் விரைவு தங்கியுள்ளது.

அதற்கிடை இந்த யதார்த்தத்தை உணர்ந்து பேச்சுவார்த்தைகளை நடைபெறாமல் செய்து தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை தடுத்தல் சிறீலங்காவின் வழமையாக உள்ளது என்பதை சர்வதேச சமுகம் ஏற்று இது தான் வழமை என்றால் விடுதலைப் புலிகளை அங்கீகரித்து தமிழர் பிரச்சினைக்கு தீர்வைக் காட்டுதல் மூலம் இலங்கைத் தீவில் சிறீலங்கா நடத்தி வரும் இனஅழிப்பில் இருந்து தமிழீழ மக்களைப் பாதுகாத்தல் சர்வதேசக் கடமை. ■

# லெப். சீலன் ஒரு தனித்துவமான போராளி

"ஒரு கெரில்லாப் போராளியின் வீரம் அவனது இயந்திரத் துப்பாக்கியில் இல்லை. அவனது மனதில் தான் இருக்கிறது." இது தமிழீழத்தின் போராட்ட வரலாற்றில் முதன்மை வாய்ந்த கெரில்லா வீரன் லெப். சீலனின் அனுபவ மொழியாகும்.


லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி என்ற சொந்தப் பெயரைக்கொண்ட சீலன் திருமலையின் வீரமண்ணில் விளைந்த நன்முத்து. சிங்கள இனவெறி ஆட்சியாளர்களின் நேரடியான ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டுகிடந்த திருகோணமலையின் நடைமுறை அனுபவங்களை கண்கூடாகக் கண்டவர். அவர் சிறீலங்காவின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் கடற்படை, விமானப்படையின் அடக்குமுறைகளும் இராணுவம், பொலீஸ் ஆகியோரின் அரவணைப்புடன் சிங்களக் காடையர்கள் தமிழ் மக்கள் மீது புரிந்த கொடுமைகள் இவற்றுக்கு முடிவுகட்ட ஆயுதப்போராட்டமே ஒரேவழி என்பது சீலனின் ஒரே நம்பிக்கையாக இருந்தது. இதுவே சீலனை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்தது.

தமிழீழத்தை நோக்கிய அவரது சிந்தனைகளும், செயற்பாடுகளும் திட்டவட்டமானவை. தலைவர் பிரபாகரனின் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விடுதலைப் போராட்டத்திலேயே தமிழீழம் வெல்லப்படும் என்பதில் சீலன் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். தலைவரின் நேர்மையிலும், தூய்மையிலும், திறமையிலும் அவர் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தார்.

இயக்கத்தில் சேர்வதற்கு முன் விட்டெறிந்துவிட்டு வருவதற்கு வளமான வாழ்க்கையோ- கைநிறையக் காசு கிடைக்கும் தொழிலோ சீலனுக்கு இல்லை. ஆனால் இவரை நம்பி அன்றாடம் உணவுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு வறிய குடும்பம் இருந்தது.

ஆனால் கல்லூரி நாட்களிலேயே இனவெறிபிடித்த சிங்கள ஆளும் வர்க்கத்திற்கெதிரான போராட்ட உணர்வு கொண்டவராக சீலன் திகழ்ந்தார். 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொண்டுவரப்பட்ட சிறீலங்கா ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜே.ஆர்.ஜெவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வைபவத்தினை தமிழீழ மண்ணில் கொண்டாட சிங்கள ஆட்சியாளர் எண்ணினர். இந்த வைபவத்தினை யொட்டி திருமலை இந்துக்கல்லூரியில் சிறீலங்காவின் தேசியக்கொடியை ஏற்றி வைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சீலன் தனக்கே உரித்தான நுட்பமான அறிவினைப் பயன்படுத்தி பொஸ்பரஸ் என்னும் இரசாயனத்தை அக்கொடிச்சுருளில் மறைத்து வைத்தார். தேசியக் கொடியை ஏற்றும்போது அது எரிந்து சாம்பராகியது. சந்தேகத்தின் பேரில் 18 வயது மாணவனான சீலன் கைது செய்யப்பட்டு சிங்களக் கூலிப்படையால் சித்திரவதை செய்யப்பட்டார். அந்த வயதிலும் தனக்கு உடந்தையாக இருந்த எவரையும் அவர் காட்டிக் கொடுக்கவில்லை.

அவர் தனது ஆயுதப்போராட்ட வரலாற்றில் சாதித்தவை மகத்தானவை. 1981 அக்டோபர் மாதம் பிரிகேடியர் வீரதுங்கா சிறீலங்கா அரசாங்கத்தால் பதவி உயர்த்தப்பட்டு யாழ் இராணுவ அதிகாரியாக நியமிக்கப்பட்டபோது தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதற் தடவையாக சிறீலங்கா இராணுவக் கூலிப்படைக்கு எதிரான கெரில்லாத் தாக்குதலுக்கு தலைமைதாங்கி வெற்றிகரமாக நடாத்தி இரண்டு சிங்கள இராணுவத்தினரைச் சுட்டுவீழ்த்தியவர் சீலன்.



1982 இல் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்திற்காக ஜே. ஆர். ஜெயவர்த்தனா விஜயம் செய்ததை ஒட்டி காரைநகர் பொன்னாலைப் பாலத்தில் கடற்படையினரின் ட்ரக் வண்டியைச் சிதைக்கும் தாக்குதல் நடவடிக்கை சீலன் தலைமையிலேயே நடைபெற்றது. இத்தாக்குதலில் இருந்து சிறீலங்காக் கடற்படையினர் தப்பிக்கொண்ட போதிலும் இத்தாக்குதல் சிறீலங்கா அரசுக்கு அச்சமூட்டுவதாக அமைந்தது.

1982 அக்டோபர் 27ஆம் திகதி சாவகச்சேரிப் பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் வலது காலில் காயமடைந்த சீலன் காலைக் கெந்திக் கெந்தி இழுத்தவாறே தனது துப்பாக்கியுடன் எதிரிகளின் துப்பாக்கியையும் நண்பர்களின் கைகளில் கொடுத்து விட்டு மயங்கிச்சாய்ந்தார்.

இத் தாக்குதலுக்கு ஐந்து மாதங்களுக்குமுன் பயிற்சியின் போது நெஞ்சில் குண்டுபாய்ந்து சிகிச்சை பெற்று ஓரளவு உடல்நிலை தேறியிருந்த சீலனுக்கு இது இரண்டாவது தடவையாக காயம்பட்டது. ஆனால் அவர் ஓயவில்லை.

சிங்கள இனவெறியரான ஜே.ஆரின் ஐ.தே.க வின் உறுப்பினர்களாக இருந்த மூவர் மீது 1983 ஏப்பிரல் 29ஆம் திகதி இயக்கம் மேற்கொண்ட நடவடிக்கை சீலனின் தலைமையிலேயே இடம்பெற்றது.

1983 மே மாதம் 18ஆம் திகதி நடந்த உள்ளூராட்சித் தேர்தலை தமிழ்மக்கள் பகிஸ்கரித்திருந்தபோது தேர்தல் நிலையங்களின் பாதுகாப்பிற்கு யாழ் குடாநாடு முழுவதும் ஆயுதப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு கந்தர்மடம் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்திற்கு மூன்று சைக்கிள்களில் சீலனின் தலைமையின் கீழ் சென்ற போராளிகள் அங்கு நின்ற இராணுவத்தினர் மீது துணிகரத் தாக்குதலை நடாத்தினர்.

1983 யூலை 5ஆம் திகதி வாகனம் ஒன்றில் சென்ற சீலனின் தலைமையிலான குழு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் நுழைந்து நான்கு பெரிய தகர்ப்புக் கருவிகளையும் தேவையான சாதனங்களையும் எடுத்துக்கொண்டது. இக்கருவிகள் பின்னர் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைளுக்குப் பெரிதும் உதவின. ஆனால் இக்கருவிகளைப் பெற்று பத்து நாட்களின் பின்னர். சீலன் வீரச்சாவடைந்த சம்பவம் நிகழ்ந்தது.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆம் திகதி மாலை மூன்று மணிக்கு தேசத்துரோகி ஒருவனின் காட்டிக் கொடுப்பால் சீலன், ஆனந்த் உட்பட நான்கு போராளிகள் தங்கியிருந்த மீசாலைப்பகுதியை சிங்கள இராணுவம் சுற்றிவளைத்தது. ஒரு மினிபஸ், இரண்டு ஜீப், ஒரு ட்ரக் வண்டிகளில் வந்த நூறுக்கும் மேற்பட்ட சிவிலுடையணிந்த சிங்கள இராணுவ அதிரடிப்படையினர் சுற்றி வளைத்தனர்.

இதனை உணர்ந்துகொண்ட போராளிகள் நால்வரும் தங்கள் துப்பாக்கிகளை இயக்கியவாறு முற்றுகையை உடைத்து வெளியேற முயன்றனர். இவர்கள் வெட்ட வெளியில் நிற்க இராணுவமோ பனை வடலிக்குள் நிலையெடுத்திருந்தது. இடைவிடாது போராட்டம் தொடர்ந்தது.

இந் நிலையில் சிங்கள இராணுவத்தின் துப்பாக்கிச் சன்னம் ஒன்று சீலனின் மார்பில் பாய்ந்திருந்தது. ஆனால் அவர் உயிர் போகவில்லை. உயிருடன் எதிரிகையில் அகப்படக்கூடாது என்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மரபிற்கு ஏற்ப, "என்னைச் சுட்டுவிட்டு ஆயுதங்களுடன் பின்வாங்குங்கள்" என ஏனைய போராளிகளுக்கு சீலன் கட்டளையிடுகின்றார். திகைத்துப்போன அந்தப்போராளிகள் நிலைமையை உணர்ந்து கட்டளையை நிறைவேற்றுகின்றனர்.

அதேபோல இம் மோதலில் ஆனந்த் என்ற போராளியும் காயமடைந்து விழ்கிறார். அவரும் "என்னையும் சுட்டுவிடுங்கள்" என கோரிக்கை விடுகின்றார். இவரையும் சுடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட மற்றைய இருபோராளிகள் முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளியேறினர்.

> "ஒரு கெரில்லாப் போராளியின் வீரம் அவனது இயந்திரத் துப்பாக்கியில் இல்லை. அவனது மனதில் தான் இருக்கிறது."

லெப். சீலன் போராட்டத்தின்போது எவ்வாறு ஒரு தனித்துவமான போராளியாக விளங்கினாரோ அவ்வாறே அவரது வீரச்சாவும் வித்தியாசமாக அமைந்தது. இவ்வாறான மாவீரர்களின் தியாகங்களின் பலத்திலேயே தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்றும் வீறுநடைபோட்டுச் செல்கின்றது. ■

## மணிக் கவிதைகள்

### முன்னெச்சரிக்கை

சென்ற நூற்றாண்டின்
சிதிலங்கள் வேண்டாம் எம்
வாயு மண்டலத்தை -சிங்கள
வல்லூறுகளின்......
கந்தகக் காற்றிலிருந்து
காப்பாற்றியாக வேண்டும்
எம் இனத்தின்
மூதாதைச் சுவாசங்கள் - இந்த
வாயு மண்டலத்தில்
வாழ்கின்றதால்
இன்னும் எத்தனையோ
தலைமுறைகள்
சுதந்திரமாய் இங்கே
சுவாசிக்க இருப்பதால் எம்
காற்றை நாம்
காப்பாற்றியே ஆகவேண்டும்

மா. நிரஞ்சலன்

### காற்று அறியும் உண்மை

வெண்ணிற அரசி உலாப்போனாள்
கருமையைப்பரவிட்டு பரவிட்டு
பகல்களையும் இரவாக்கி
திசைகளெங்கும்
இருள்வர்ணங்குழைத்து
அப்பினாள்
அப்படியே ஆபிரிக்காவின் நதிகளிலும்
விஷமுள்ளைத் தூவினாள்
புற்களுக்கும் அவள் பூசினாள் இருளின்
நிறத்தை

பூக்களும் இனிக் கறுப்புத்தானென்றாள்
வானத்தை நீலமென்று சொன்னவரை
நகைத்தாள்

பின் அழைத்து விலங்கிட்டாள்
பறவைகள் இனிப்பறப்பது தீதென்றாள்

புதிர்களும் கேலியும்
மகாஜனங்களின் மொழியாகிற்று

அரசியோ மிருகங்கள் இனிப்பறக்கு
மென்றும்
மேதைகள் அலைவார்களென்றும்
தீர்க்கதரிசனம் சொன்னாள்
தனக்கே மூலவேர் உண்டென்றும்
தனதே ஆதிவிக்கிரமென்றும்
புலம்பினாள்
தன்னுடைய சிங்கம்
வெள்ளையென்றும்
அதன் கையிலிருப்பது வாளல்ல
அது ஒரு பூங்கொத்துத் தானென்றும்
அவள் சத்தியம்செய்தாள்

வெண்கொற்றக்குடையின் கீழ்
அரசியின் விழிகளிலிருந்து ஊனம்
வழிந்தது
நிணம் நாறிக்காற்றுலர்ந்தது
மகாஜனங்கள் புலன்களை
அடக்கினார்கள்

வடகீழ்த்திசையிலிருந்து
நகைப்பொலிகேட்டது
இயல்பின் வண்ணங்களுடன்
எல்லாமிருக்க
ஒரு ஒளிப்புள்ளி வளர்ந்து
கொண்டிருந்தது
கோடிவருஷங்கள் உண்மையறிந்த
காற்று
நானறிவேன் இங்குள
தமிழ் ஒலியின் காலத்தொகை என்றது.

-கருணாகரன்-

# மனக்கலக்கம்



"அண்ணை!... குமாரண்ணை... என்ன நித்திரையே?" குரல் கேட்டதும் மெதுவாகத் திறந்துபார்த்தேன் நான்.

முன்னால் நாதன் நின்றிருந்தான்.

மெல்லச்சிரித்த நான் சாய்ந்திருந்த மரத்திலிருந்து நிமிர்ந்து உட்காந்தேன்.

"என்னண்ணை அப்படி?... நித்திரையோ இல்லை யோசினையோ? கனநேரம் கூப்பிட்டிருப்பன்..."

என்றவாறு என்னருகில் உட்கார்ந்தான் நாதன்.

"உதுதான் நாதன் நான் பேசிலேயே இருக்க விரும்புறேல்ல. ஏதாவது ஒண்டைச் செய்து கொண்டிருந்தா... இப்பிடிக் கிடந்து தூங்குவனே...?"

"அண்ணை....உங்கள எனக்குத் தெரியாதே... ஏன் பொய் சொல்லுறியள். உங்களுக்கு உங்கட வீட்டு நினைப்பெண்டு எனக்குத் தெரியும். அவயின்ர நிலைமை என்னெண்டு தெரியாம... கலங்குறியள் என்ன?"

எனது மனநிலையை நாதன் தெளிவாக உணர்ந்து கொண்டது அவனது சொற்களில் தெரிந்தது, அதே நேரம் எனக்குள் ஒரு கேள்வியும் எழுந்தது.

இந்த நினைப்புக்கள் எனக்கு மட்டும் தானோ?... இல்லாட்டி... என்னைப் போல எல்லாப் போராளிகளும் இப்படித்தானோ?

இந்நினைப்பினால் எனக்குள் ஒரு பெருமூச்சும் எழுந்தது.

எனது மன ஓட்டத்தை உணர்ந்த நாதன்,

"அண்ணை... உங்கள மாதிரித்தான் நாங்களும். ஆனால் நீங்கள் உங்கட உணர்ச்சிகளை வெளியில் காட்டுறியள்... அதக் கட்டுக்குள்ள வைச்சிருந்தா... சரி... அதுசரி... அண்ணை, இந்தாங்கோ... சாப்பாடு வந்திட்டுது" என்று என்முன் ஒரு பாசலை வைத்தான். அப்பொழுதுதான் அவனது கையிலிருந்த சாப்பாட்டுப் பாசலைக் கவனித்த நான்,

"என்னடாப்பா இண்டைக்கு ஒரு பாசலோ?"

இல்லையண்ணை இந்தப் பாசல் உங்களுக்கு, நான் இண்டைக்குச் சாப்பிடேல்ல" என்றான்.



அவனை உற்றுப்பார்த்த நான், "ஏனடா பாசல் குறையவே வந்தது."

"இல்லையண்ணை எனக்கு" என்று அவன் சொல்லும் போதே எனக்கு விசயம் விளங்கிவிட்டது. எட்டி அவன் ஜீன்ஸ் பொக்கட்டுக்குள் கையைவிட்டு வைத்திருந்த பாசலை எடுத்து "சரி இனிப்போ, நீ இண்டைக்கு சாப்பிட வேண்டாம்" என்றேன்.

"ஐயோ அண்ணை... எனக்குப் பசிக்குது. நான் போட்டுவாறன்" என்றபடி நான் முதல் நிலத்தில் வைத்திருந்த பாசலை எடுத்துக் கொண்டு ஓடினான்.

நான் சிரித்தபடி, எனது சாப்பாட்டுப் பாசலைப் பிரித்தேன்.

சாப்பாட்டைப் பார்த்ததும், எனக்கு அம்மாவின்ர நினைவுதான் வந்தது.

அம்மா... சோறு குழைச்சு எனக்கு... தீத்தினது... நான்... எனது தங்கச்சிக்கு... தீத்தினது...

கண்கள் இலேசாகக் கலங்கின.

ம்... இப்ப... அம்மாவும் தங்கச்சியும் யாழ்ப்பாணத்திலதான் இருப்பினம் எப்ப பார்க்கப் போறேனோ... அம்மா இப்பவும்... அப்பாவின்ர நினைப்பிலதான் இருப்பா... என்னை நினைச்சு ஏங்குவா... அப்பா... கூட இருந்தாலும் பரவாயில்லை... ம்... அப்பாவும் இல்லை அந்த நேரம்... இந்தியன் ஆமி அமைதிப்படையாக வந்திருந்த காலம். அந்த நேரத்திலேயே நான் இயக்கத்தில இணைஞ்சுட்டன். அமைதிகாக்கும்படை, அமைதி குலைக்கும் படையாக மாறி... மக்களைத் துன்புறுத்தின நேரம் — அவங்கடை கெடுபிடிக்குள்ள எங்கடை குடும்பமும் ஆளானது. அந்தக் கொடுமையின்ர முடிவில எங்களுச் சொந்தமில்லாமப்போனதுகளில எங்கட அப்பாவின்ர உயிரும் ஒண்டு.

இந்த நினைவுகளில் இருந்து விடுபட்ட நான், சாப்பிட்டு முடித்துக் கைகளைக் கழுவினேன்.

இரவு படுத்தபோது, நித்திரைவர மறுத்தது. "குமார்... நாளைக்கு யாழ்ப்பாணம் போற குறூப்போட நீயும் போறாய் ரெடியாயிரு."

என்ற சொற்கள் மீண்டும் காதுகளில் ஒலிக்க நான் புரண்டுபடுத்தேன்.

பொழுது புலர்ந்து, வானம் வெளிக்கும் முன் நாங்கள் அனைவரும் தயாராகிவிட்டோம்.

எம் விரைவுப் பயணத்தில் எனது மனம் அலைக்கழிந்தது. ஏதோ எதிர்பார்ப்பில் நெஞ்சு படபடத்தது. எவ்வளவோ என்னைக் கட்டுப்படுத்த முயன்றாலும். இவ்விடயத்தில் நான் கோழை என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

நாம் அடுத்த கரையை விரைவில் அடைந்துவிட்டோம்.

அன்று, அங்கு ஓய்வெடுத்துக் கொண்ட நாம், அதன் பின்னர், மேற்கொண்ட பயணம் நீண்டதும், கடுமையானதும்கூட. அப்பயணத்தின் பெரும்பகுதியை எமது கால்களே மேற்கொண்டன.

நாங்கள் பத்துப்பேர் எங்களது பிரதேசமான வடமராட்சிக்குள் நுழைந்தோம். எங்களுக்கு நெல்லியடிப்பகுதியில் தங்குவதற்கு ஒரு இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இங்கு நான் கடமை நிமித்தம் தோழர்களுடன் வந்தபோதும், எனது வீட்டைச் சென்றுபார்க்க உள்ளம் விளைந்தது. ஏனெனில் எனது வீடும் நெல்லியடிப் பிரதேசத்தில்தான் இருந்தது.

அடுத்த நாலைந்து நாட்கள் எங்களுக்கு வேலைகள் இருந்ததால் எனது ஆவல் பூர்த்தியாகாமல் இருந்தது.

என்னுடைய அம்மாவையும், தங்கச்சியையும் பார்க்கவேணும் என்ற ஆசையைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்து, எனது கடமையை நான் செய்து கொண்டிருந்தேன்.

ஒரு நாள் காலைப் பொழுதில், ஊரின் நிலைமையை அறிவதற்காக எங்களது வீட்டுப்பக்கம் சென்றேன். எங்களது வீட்டைக்கண்டுபிடிக்க நான் நன்றாகச் சிரமப்பட்டுவிட்டேன்.

கண்டுபிடித்ததும் திகைத்துவிட்டேன். மனம் பார்வையை நம்ப மறுத்தது. விபரீதங்களை எண்ணியது.

ஏனெனில் எனது மனதில் அழகான படமாக எனது வீடு நிறைந்திருந்தது. வீட்டு முற்றத்தில் மல்லிகைப்பூப் பந்தல் பூத்துக் குலுங்கும் காட்சியும், அழகாகத் தங்கைச்சியால் பரிவுடன் வளர்க்கப்படும் — பூங்கன்றுகளுமே மனதை ஆக்கிரமித்திருந்தன.

ஆனால் நீரின்றிப் போதிய பராமரிப்பின்றி பட்டுப்போய் நின்றிருந்த பூங்கன்றுகளும், பந்தலில் படர்ந்திருந்த கொடி இருந்ததற்கு அடையாளமே இல்லாமல், பந்தலும் சரிந்திருக்க, வீடு இவ்வாறு இருக்கும் என்று, நான் கனவில்கூட நினைத்திருக்கவில்லை.

இந்தக் கோலத்தில் எங்கள் வீட்டைப் பார்த்தபோது, நான் திகைத்ததில் வியப்பொன்றும் இல்லை என்பதை, எந்நிலையில் நீங்கள் இருந்திருந்தால் உணர்ந்திருப்பீர்கள்.

நான் இப்படி வீட்டைப் பார்த்ததும், சிறிது நேரம் பிரமைபிடித்து மரம்போல் நின்றுவிட்டேன்.

ஏதோ ஒரு உணர்வுதாக்க, என்நிலையை அடைந்த நான் சிந்தனைகள் தடுமாற, மெதுவாக வீட்டு வளவுக்குள் நுழைந்தேன்.

பல கேள்விகள் பதிலறியத் துடித்தன. கேள்விகள், எனது உணர்வைச் சிதைத்துக் கொண்டிருந்தன.

"அம்மா... என்ரை அம்மா... எங்கை? தங்கச்சி... இருக்கிறாளா?" வாய்விட்டுக்கதற முடியாமல் மனம் ஊமையாய் அழுதது.

நான் சூனியமாக நின்றிருந்த, எங்கள் வீட்டினுள் நுழைந்தேன். உயிரற்ற பிண்டமாய் நான் அசைவது போன்று எனக்கோர் உணர்வு.

பழைய நினைவுகள், உள்ளத்தை உழல வைத்தது. வீட்டின் ஒவ்வொரு இடமும், மனதில் ஒவ்வொரு சம்பவமாய் நினைப்பூட்டியது. கண்களிலிருந்து மெதுவாக கண்ணீர் வழிதேடி இறங்கியது.

விடை தெரியாத கேள்விகள், மீண்டும் என்னைத் துளைத்தெடுத்தன.

மெய்நடுங்க.. அந்த அறைக்குள் நுழைந்தேன். அங்கு, தூசியின் தழுவலில் இருந்த பொருட்களிலெல்லாம் அவனது முகம் தெரிகிறது.

ஒவ்வொரு பொருளாகக் கைகளில் எடுத்து " அதற்கு வலிக்குமோ" என்ற வகையில் அதைக் கைகளால் தடவினேன்.

"அவளது, தலையைத்தான் தடவிக் குடுக்க முடியேல்லை ம்... இதையெண்டாலும் தடவி ஆறுதலடைவம்" என்று மனம் மயங்கியது.

மேசையில், அவளது கொப்பி புத்தகங்கள் சிதறுண்டுகிடந்தன அவற்றை நெருங்கி, ஒவ்வொன்றாக புரட்டிப் புரட்டி சலிப்புடன் போட்டேன்.

" என்ரை தங்கச்சிக்கு நான் பழக்கின பழக்கங்களில் பிரயோசனமானது டயறி எழுதுகிறது" மனம் நினைக்க நான் அவளின் டயறியைத் தேடினேன். புத்தகங்களுக்கு நடுவில் அது கிடைத்தது. படபடக்கும் மனதுடன் அதை வாசித்தேன். நடந்த விஷயங்கள் விபரமாய்த் தெரிந்தது.

இப்போது, அவள் எழுதியதில், தேவையானதை மட்டும் தருகிறேன்.

அவளுக்கு, இந்த அண்ணனில் இருக்கின்ற பாசம், அன்றைக்கு அவள் எழுதிய வார்த்தைகளில் தெரிந்தது.

*14.தை. 1998*

இன்றைக்கு தைப்பொங்கல், இன்றைக்கு காலமை எழும்பினவுடன், எனக்கு அண்ணன்ரை நினைவுதான். அண்ணா, இஞ்சை இருக்கேக்க விஷேசமென்டா, வீட்டை கட்டாயம் வருவான். இப்ப வன்னியில எங்கை இருக்கிறானோ?

நானும், அம்மாவும் இன்றைக்கு, பிள்ளையார் கோயிலுக்கு போய், அண்ணன்ரை பேருக்கு அரிச்சனை செய்தம்.

"எப்பபார் அம்மாக்கும் தங்கச்சிக்கும் என்ரை நினைவுதான்" ஒவ்வொரு பக்கமாக புரட்டினேன். எல்லாப்பக்கத்திலேயும் என்னைத்தான் நினைத்திருந்தாள்.

பக்கங்களைத் தட்டிக் கொண்டிருந்தபோது ஒரு பக்கத்தில் பார்வை சிறிது நின்றது.

*24 பங்குனி.1998*

நான் காலமை, ராஜியோடை ரியூசனுக்கு போனேன். வழமையைவிட இன்றைக்கு, ஆமி கனநேரம் என்னை விசாரிச்சவன். அண்ணனைப் பற்றியும் விசாரிச்சவன்.

அண்ணன் வெளிநாட்டில் எண்டுதான், நானும் அம்மாவும் ஆரும் விசாரிச்சா சொல்லுறனாங்கள்.

"நான் அப்பவும், இவையை வன்னிக்கு வரச்சொன்னனான், இதால... என்ன பிரச்சனையள் வந்துதோ தெரியேல்லை.."

ஒரு பெருமூச்சுடன் மேலும் பக்கங்களைத் தட்டிக் கொண்டிருந்தேன். படபடவென தாள்களை தட்டியதும், ஒன்றுமே எழுதாத வெறும் தாள்கள் வரத் தொடங்கின. அவள் கடைசியாக எழுதியிருந்த பக்கத்தை புரட்டினேன். விரல்கள் நடுங்கின.

*26. வைகாசி.1998.*

இன்றைக்கு ரியூசன் முடிஞ்சு, வீட்டை வந்தபோது....

ந.மயூரரூபன்

தொடர்ச்சி 11ம் பக்கம்

## அன்புச் சகோதரமே...

### வணக்கம்!

ஏப்பிரல் பத்தொன்பதாம் திகதி.
பூபதி அம்மாவின் நினைவுநாள்.
பன்னிரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. என்றாலும்...
இப்போதுபோல நினைவுகள் அழுத்த
மனம் கனத்து கண்கள் கலங்குமாப்போல் உணர்வு.
ஒரு தாயின் இழப்பை மறத்தல் சாத்தியமா..?
அதிலும் தன் தேசக் குழந்தைகளுக்காக ஒரு மாதம்
பட்டினிப் போர் நடத்தி... உடல் துவள..
உயிர் துடிக்க... குரல் மெலிந்து... உருகி உருகி... பூபதி அம்மா.

நமது மண்ணுக்காக நமது மக்களுக்காக தன்னையே ஒப்படைத்துச் சென்ற பூபதி அம்மாவின் நினைவுகள். சாதாரண நிகழ்வுகள் தானா?

இல்லை. நமது போராட்டம் உலகத்திற்கு முன்னோடியாய்... நமது போராளிகளின் அற்புதமான தியாகங்கள் உலக விடுதலைப் போராட்டத்தின் அரிய பாடங்களாய்... மிளிர்கின்றதுபோல..

அன்னை பூபதியும் உலகத்தின் முன்னோடித் தாயாக மிளிர்கின்றார்.

தமிழீழ மக்களின் தேச விடுதலைப் போராட்டத்தில் அன்னை முதன்மையானவர் முன்னிற்பவர் என்பது மாத்திரமல்ல.

அவர் உலகத்திற்கு ஒரு உதாரணம்.

ஆயுதம் தூக்கி, விடுதலைக்காய் பிரமாணம் எடுத்து களம்நோக்கி விரையும் பெண்போராளிகளின் அணியில் அல்லாமல்...

ஒரு சாதாரண குடும்பப்பெண்ணாய்... குடும்பத்தலைவியாய்... தான் தன் கணவன்.. தன் குழந்தைகள்... தன் வீடு.. தன் சுற்றம் என்ற குறுகிய சுவரை உடைத்துக்கொண்டு.. ஒரு தாய் தன் தேசமக்களுக்காக தன் தேசமக்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் பாதுகாப்புக்குமாக உண்ணாவிரதம் இருந்து தியாகமரணமடைந்த அற்புதம் உலகத்தில் வேறெங்காவது நிகழ்ந்ததுண்டா?

அன்னை பூபதி.. மேடைபோட்டு பேசுபவர் அல்ல. விடுதலை குறித்தோ பெண்விடுதலை குறித்தோ அறிக்கைவிடுபவர் அல்ல. வெற்றுப் பேச்சுக்களை வெறுக்கும் ஒரு அமைதியான செயல் வீராங்கனை அவர். விடுதலை குறித்தோ விடுதலைக்கான தியாகம் குறித்தோ, சற்றேனும் கரிசனம் கொள்ளாத ஒரு பழைமைப் பின்னணியில், சாதாரண குடும்பவாழ்கை வாழ்ந்த அன்னையால் குடும்ப உறவுகளையும், பாசவலைகளையும் அறுத்தெறிந்து, தனது தேச மக்களுக்காக உயர்ந்த தியாகத்தைப் புரிய துணிவும் உறுதியும் ஏற்பட்டது எத்துணை வியப்பிற்குரியது.

முதுமை வயதிலும், அவர் தெளிவாய் இருந்திருக்கின்றார். உறுதியாய் இருந்திருக்கின்றார். நவநாகரீக பெண்விடுதலைப் பிரசாரகர்களுக்கு மத்தியில்... தன் அற்புதமான தியாகத்தால் உயர்ந்திருக்கின்றார். சாதாரண வாழ்க்கை வாழ்ந்தபோதும் போராட்டம் என்பது எத்துணை தூய்மையானது என்பதை உணர்த்தியிருக்கின்றார். தன் மன அழகை அவர் பதித்துச் சென்றிருக்கின்றார்.

அம்மாவின் நினைவுகள் வாழட்டும்! வளரட்டும்!
நினைவுகள் எப்போதும் ஈரமானவை.
அதிலும்.. கனத்த நினைவுகள் உயிர்ப்பு மிக்கவை.
இரத்தோட்டம் மிக்கவை.

அன்புடன்..
ஆசிரியர்.




## தமிழீழத் தேசியக்கொடி

தமிழீழத் தேசியக்கொடியின் பயன்பாட்டு விதிமுறைகள் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையால் வெளியிடப்பட்ட தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்ற சிறுகைநூலில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை, பகுதி பகுதியாக, இங்கு பிரசுரிக்கின்றோம்.



# தேசியக்கொடி

### கொடி வணக்கத்தின்போது தவிர்க்கப்பட வேண்டியவை:

தேசியக்கொடிக்கு வழங்கப்படுகின்ற மதிப்பு, சிறப்பு என்பன அந்த நாட்டைச் சென்றடைவது போன்று, தேசியக்கொடிக்கு ஏற்படத்தப்படும் இழிவு, புறக்கணிப்பு என்பனவும் அதன் நாட்டையே சென்றடையும். எனவேதான் தேசியக் கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு பெருங்குற்றமாகக் கருதப்பட்டு அக்குற்றத்திற்கு மிகுதியான ஒறுப்பு (தண்டனை) வழங்கப்படுகின்றது.

தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்துகின்ற கொடி வணக்க நிகழ்வுக்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சீரான ஒழுங்குமுறை வரையறுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கொடியேற்றம், கொடிவணக்கம் என்பவற்றுக்கான ஒழுங்குமுறை, நடைமுறை நாட்டுக்கு நாடு வேறுபட்டமுறையில் அமைந்திருக்கும். அந்த வரையறுக்கப்பட்ட ஒழுங்கு முறைகளை மீறுவது தேசியக்கொடிக்கு இழைக்கப்படுகின்ற இழிவாகவே கொள்ளப்படும்.

நாடுகளின் தேசியக்கொடிகள் தவிர்ந்த பிரதேசக்கொடிகள், திணைக்களங்களின் கொடிகள், சங்கங்களின் கொடிகள், பாடசாலைகளின் கொடிகள் போன்ற ஏனைய கொடிகள் எமது தேசியக் கொடியுடன் ஏற்றப்படுவதாயின் தேசியக்கொடியின் கம்பத்தைவிட 2அடி குறைவான கொடிக் கம்பத்தில் தேசியக்கொடியைவிடப் பெரிதாக அமையாத கொடிகளை தேசியக்கொடியின் இரு புறங்களிலும் தேசியக்கொடி ஏற்றப்பட்டதன் பின் ஏற்றப்படவேண்டும்.

6ம் பக்கத் தொடர்ச்சி

## ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின்...

இரு மாதத்திற்கு ஒரு முறையும் ஒரு தமிழ்ப்பெண் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்படுகிறாள். இங்கு குறிப்பிடப்பட்டவை தமிழர் மனித உரிமை மையத்தினரால் திரட்டப்பட்ட விபரங்களின் அடிப்படையிலானவை. உண்மையான விபரங்கள் இவற்றைவிட அதிகமாயிருக்கலாம்.

ஆகையால் இலங்கைத் தீவில் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறை, படுகொலைகள், கைதுகள் ஆகியவற்றில் இவ்வாணைக்குழுவும் பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான ஐ.நா பிரதிநிதியும் உடன் அக்கறை செலுத்த வேண்டுமென" திரு. கிருபாகரன் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவிடம் கேட்டுக் கொண்டார்.

இவ் ஆணைக்குழுவில் சர்வதேச சர்வநம்பிக்கை என்ற அமைப்பின் சார்பில் மதிப்பிற்குரிய வணபிதா எஸ்.ஜே. இம்மானுவேல் பேசுகையில் குறிப்பிட்டதாவது, "சிறீலங்காஅரசு சமாதானத்திற்கான போர் என்ற போர்வையில், இலங்கைத்தீவில் வாழும் ஈழத்தமிழ் மக்களையும் சந்தேகத்திற்குரியவர்கள் என்று கூறிக் கைதுசெய்வதுடன், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளான சமூக, பொருளாதார அடிப்படை உரிமைகளை அலட்சியம் செய்கின்றது. அத்துடன் 1991ஆம் ஆண்டு தொடக்கம் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மனிதநேயமற்ற பொருளாதாரத் தடையை அமுல்செய்துள்ளனர். அதனால் அப்பகுதிகளில் உணவு, மருந்து, கல்வி வசதியின்றி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதாரத் தடையினால் 40 வீதமான கர்ப்பிணித்தாய்மார்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சமய, கலாச்சார, மருத்துவக் கட்டிடங்கள் தொடர்ந்தும் திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன."

கஷ்டத்திற்குள்ளாக்கப்பட்ட மக்கள் சமுதாயம் என்ற அமைப்பின் சார்பில் பேசிய பேராசிரியர் கலாநிதி யோன் நீல்சன் கூறியதாவது "தமிழ் மக்களின் சமூக பொருளாதார கலாச்சார நிலைமைகள் பற்றி நாம் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம். இலங்கைத்தீவில் 65,000 மக்கள் கொல்லப்பட்டும் 8 00 000 மக்கள் உள்நாட்டிலும் இடம்பெயர்ந்துள்ளனர். வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மீது சிங்கள மொழி திணிக்கப்படுகிறது. இன்று 90 வீதமான அரச ஊழியரும், 99 வீதமான பாதுகாப்புப் படையினரும் சிங்களவரே! இதேநேரம் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் திட்டமிடப்பட்ட சிங்களக்குடியேற்றம் அதிகரித்து வருகிறது. தமிழ் மக்கள் தமது தாயகபூமியிலிருந்து விரட்டப்படுகின்றார்கள். இந்த நிலையில் நாம் இந்த ஆணைக்குழுவிடம் கேட்டுக் கொள்வது, இன்னும் எவ்வளவு ஆண்டுகள் இவ்வாணைக்குழு தமிழருக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்கப் போகின்றது? எப்பொழுது கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதே."

அத்துடன் வேறுபல அரசசார்பற்ற நிறுவனங்களான அமெரிக்க வழக்கறிஞர்கள் சங்கம், சித்திரவதைகளுக்கு எதிரான உலக அமைப்புப் போன்றன தமிழீழ மக்களின் மனித உரிமை நிலைகளை எடுத்துரைத்தன.

அதேவேளை கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளின் சார்பில் போர்த்துக்கல் போன்றவை சிறீலங்காவும் விடுதலைப் புலிகளும், தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகளைப் பயன்படுத்தி சமாதானமாகப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்று எடுத்துரைத்தனர். ■

10ம் பக்கத் தொடர்ச்சி

## மனக்கலக்கம்

அங்கை... அம்மா... இரத்த வெள்ளத்தில் கிடந்தா. வீட்டுக்குள்ள, நாலைஞ்சு ஆமிக்காரங்கள் நான் குழறிக் கொண்டு போய், அம்மாவைக் கட்டிக்கொண்டு அழுதன், என்னைத் தேடிவந்தவங்களின் வேலை தான் இது என புரிஞ்சுது.

அண்ணா !... இதெல்லாம் உனக்காகத்தான்... நீ எப்பவெண்டாலும் இதை வாசிப்பாய் எண்டுதான் எழுதுறன் நீ நடந்ததெல்லாம் அறியோனும்.

அண்ணா, இஞ்ச தமிழ்ப் பெண்கள் உயிரோடையோ, மானத்தோடையோ இருக்கேலாதண்ணை.

அதற்கு மேல் என்னால் வாசிக்க முடியாமல் போய்விட்டது அதுக்குப்பிறகு, தொடர்ந்து வாசிக்கும் மனநிலை எனக்கு இல்லைத்தான். என்றாலும் வாசித்தேன்.

ஆனா... அண்ணா நான் உன்ர தங்கைச்சி, பாதிக்கபட்ட நாங்கள், சாகிறதால இந்த ஈனற்றை வெறிச் செயலுகள் நிற்கமாட்டுது.

அதனால...

அண்ணா நான் உன்ர பாதையைத் தொடர நினைச்சிட்டன்.

அண்ணா... நீ கவலைப்படாதை... எனக்குத் தெரியுது. அழாதை... உன்னை இனி நான் சந்திப்பேனோ தெரியாது...

அதற்கு மேல், எனக்கு வார்த்தைகள் ஒன்றும் தெரியவில்லை. கண்களைக் கண்ணீர் திரையிட்டு மறைத்தது.

இதற்குமேல், இனிவரும் நாட்களில் நான் கலங்கமாட்டேன்.

எங்கள நினைச்சு அவங்கள் இனிக் கலங்கோணும். கலங்க வைப்பம். ■



மரங்களே இவர்களின்
வாழ்க்கையின் காவலன்.
மனமிலார் உளரெனில்
மரத்திலும் கீழவர்.

மனமுருக மறுப்போமா..?
மனிதராய் சுரப்போம்!

# வெங்களத்தில் வாடா வீரனுனியால் சுண்டிடுவார்!

முந்திவந்து தோன்றிய மூத்தகுடி எங்களினம்!
சொந்தப் பிறந்தகம் தொன்மைக் குமரிமடி!
சேயை வளர்த்தியே தேன்தமிழில் தாலாட்ட
தாயவள்தான் இட்ட தடுக்கன்றோ ஈழமிது!
நீலக் கடலில் நெடுங்காலம் நிற்குமெழில்
ஈழமண்ணில் எங்களினம் எப்பொழுதும்
வாழ்ந்ததுவாம்!

சிங்கக் குடிகளிங்கு சேர்ந்த சிறுபுழுக்கள்;
எங்கள் வயலில் எழுந்த களைப்புல்லு!
ஆலமரத்தை அறுகு பழிப்பதுபோல்,
கோலக் குயிலையொரு கோட்டான்
நகைப்பதுபோல்
வம்பு வழக்காடும் வாய்வீரச் சிங்களவா,
வெங்களத்தில் வாடா வீரனுனியிற் சுண்டிடுவார்!

எங்கள் உரிமை எழில்நிலத்தை நாமாண்ட
தங்கத் தமிழரசை உன்னுரிமை என்று நீ
கள்ள உறுதியின்று கையெழுதி வைத்தனையோ?
உள்ளபடி பார்ப்போம் ஒருகாநீ வந்துபார்!
முப்படையும் குண்டும் முதிர்வீர வேங்கையர்
தற்கொடைக்கும் சாப்படைக்கும் தப்புமோ?
வந்துபார்!

என்ன நினைத்தாய்? இடியும் எரிமலையும்
அன்ன தலைவனுள்ளான்; அன்னைபோல்
காக்கின்றான்!
மானம் விளைய மறங்கனல மங்கையரும்
தானையணி சேர்ந்து சமராட வந்தார்காண்!
ஈழம் இனியுனக்(கு) ஈமச் சுடுகாடே!
ஆளும் வெறியால் அறிவிழந்து போகாதே!



ஆமைபோல் இங்கே அடங்கிக் கிடக்கநாம்
ஊமை முடமாம் உடற்குறையர் அல்லோமே!
ஈக்கும் உளதாகும் இந்த வுயிர்மதியோம்;
மாக்கள்போல் மானமின்றி வாழ்வார்
தமிழரோ?
நல்லோர்கள் வாழ்வரினி நற்றமிழே
வெல்லுமாம்
அல்லோர் அழிவர் அறி!

- பண்டிதர் பரந்தாமன் -